Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 27 திங்கட்கிழமை (10.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 105

# இலங்கையில் ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தை நிறுவ வலியுறுத்து

## சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவும் வலியுறுத்துகிறது

கொழும்பு, மார்ச் 10

**இலங்கையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கண்காணிப்பகத்தை உடனடியாக ஏற்படுத்துமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலை ஜெனிவாவைத் தளமாகக் கொண்ட சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவும் கேட்டுள்ளது.**

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஆவணத்திலேயே இது குறித்த வேண்டுகோளை அந்த அமைப்பு விடுத்திருக்கின்றது. ஆணைக் குழுவின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் நிலைவரத்தின் தீவிரத் தன்மையையும், மனித உரிமை மீறல்களையும், சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் புறக்கணிக்கப்படுவதையும் கட்டுப்படுத்துவதற்கு அரச கட்டமைப்புகளோ அல்லது ஏற்பாடுகளோ இல்லாதமையைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி நகரில் எண்மர் கைது

கொழும்பு, மார்ச் 10

கண்டி நகரப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று மேற்கொண்ட தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் 13 பேர் கைதுசெய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மா, எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியம்

கொழும்பு, மார்ச் 10

நாட்டில் கோதுமை மா மற்றும் எரிபொருள்கள் ஆகியவற்றின் விலைகள் மீண்டும் அதிகரிக்கும் நிலை ஏற்படும் என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட் டிருக்கின்றன.

கோதுமை மாவின் விலை சர்வதேச சந்தையில் அதிகரித்திருப்பதை காரணம் காட்டி உள்நாட்டிலும் கோதுமை மாவின் விலை விரைவில் அதிகரிக்க சாத்தியம் இருக்கிறது. அத்துடன் இம்மாத இறுதிக்குள் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இன்று உள்ளூராட்சித் தேர்தல்; பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிப்பு

### பதற்றம், பீதிக்கு மத்தியில் நடைபெறுகிறது

மட்டக்களப்பு, மார்ச் 10

மட்டக்களப்பு மாநகரசபை உட்பட 9 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இன்று திங்கட்கிழமை நடைபெறுகின்றது.

தேர்தலுக்கான அனைத்து செயற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் நேற்றுத் தெரிவித்தார்.

மொத்தம் உள்ள 385 வாக்களிப்பு நிலையங்களுக்கும் இடம்பெயர்ந்த வாக்காளருக்கென அமைக்கப்பட்டுள்ள 6 வாக்களிப்பு நிலையங்களுக்கும் இன்று காலை வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும். அதற்கான ஒழுங்குகள் மற்றும் வாகன வசதிகள் தயாராக உள்ளன என்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் கூறினார்.

இன்று வாக்களிப்பு நடைபெறவுள்ள பிரதேசங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல் சீராக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வன்முறைகள், அச்சுறுத்தல்கள், பதற்றம் ஆகியவற்றுக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இன்றைய தேர்தலில் வாக்களிக்க உள்ளனர் என்று சுயாதீனத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றிய இப்பகுதியில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டத் தேர்தல் அவசியமென அரசு தெரிவித்துள்ளது.

எனினும், கிழக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டிவிட்டதாகக் காண்பிப்பதற்காக அரசு அரசியல் பொறுப்பற்ற விதத்தில், அவசர அவசரமாகத் தேர்தல்களை நடத்துவதாக மனித உரிமைகள் அமைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் முன் அரங்கில் ஓராண்டாகப் படைகள் ஒரு சில சதுரக் கிலோ மீற்றருக்குள் முடக்கம்!

### முன்னேற முடியாத விரக்தியில் தளபதிகள் தவிப்பு என்கிறார் நடேசன்



கிளிநொச்சி,மார்ச்.10

மன்னார் முன் அரங்கில் ஏறத்தாழ கடந்த ஒரு வருடமாக முன்னேற முடியாமல் ஒரு சில சதுரகிலோ மீற்றர் பிரதேசத் துக்குள்முடங்கிக் கிடக் கின்றது இலங்கை இராணுவப் படையணி. இதனால் இலங்கையின் பாதுகாப்பு உயர்பீடத்தில் விசனமும் விரக்தியும் ஆதங்கமும் ஏற்பட்டிருப்பது வெளிப்படையாகத் தோற்றுகின்றது. இந்தப் பின்னடைவைக் சமாளிப்பதற்காக அவசர இராணுவக் கூட்டுக்களை ஏற்படுத்தித் தம்மைப் பலப்ப டுத்தும் நோக்குடன் இராணுவத் தளபதி கள் அவசர அவசரமாக வெளிநாட்டுப் பயணங்களில் ஓடித்திருந்திருக்கின்றார்

இதேசமயம் அரசின் பேரினவாதக் கொள்கையிலான ஆட்சி முறைமை சர்வதேச மட்டத்தில் அம்பலமாகி இருப்பதால் அதன் பெயர் உலகளவில் சீரழிந்து விட்டது.

அதேவேளை அரசின் மோசமான மனித உரிமை மீறல்களினாலும் சர்வதேச

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் நண்பகலும் இரவும் அகோர ஷெல், பீரங்கி தாக்குதல்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 10

நாகர்கோயில் மற்றும் முகமாலைப் பகுதிகளில் நேற்றிரவு அகோர ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் இடம்பெற்றன.

மாலை தொடக்கம் இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்குமாக அடிக்கடி ஷெல்தாக்குதல்கள் நடைபெற்றன. இரவு சுமார் 10 மணிக்குப் பின்னர், நள்ளிரவுக்குப் பின்னர் இச் செய்தி எழுதப்படும் வரை ஒரே தொடர்ச்சியாக - அகோரமாக - ஷெல் தாக்குதல் நடைபெறும் சத்தங்கள் கேட்டன.

தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பகுதிகளிலிருந்து ஷெல்கள் சீறிப்பாய்ந்தன. அங்கிருந்து புலிகள் ஏவிய ஷெல்கள் தென்மராட்சிப் பகுதியில் வந்து வீழ்ந்து வெடித்தன எனத் தகவல்கள் தெரிவித்தன.

தென்மராட்சி , வடமராட்சியிலிருந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவநேசன் எம்.பியின் வித்துடல் நேற்று விதைப்பு

கிளிநொச்சி, மார்ச் 10

சிவராத்திரி தினமான கடந்த வியாழக்கிழமை கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த யாழ்..மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனின் பூதவுடல் நேற்று நண்பகல் மல்லாவி அனிச்சியன்குளத்தில் விதைக்கப்பட்டது.

துணுக்காய் - வெள்ளாங்குளம் வீதி ஓரத்தில் இதற்கென விசேடமாகத் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் அவரது வித்துடல் புதைக்கப்பட்டது. அங்கு விசேட நினைவுச் சின்னம் எழுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வன்னியில் பல்வேறு இடங்களிலும் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்ட சிவநேசனின் பூதவுடல் நேற்றுக் காலை பத்து மணியளவில் மல்லாவி நகரப் பகுதியில் இறுதி அஞ்சலிக் கூட்டத்துக்கு எடுத்துவரப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள், போராளிகள் ஒன்று திரண்டு சிவநேசனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அடுத்து மதன் தலைமையில் இடம்பெற்ற இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் புலிகளின் பிரமுகர் இளம்பரிதியும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், சிவநாதன் கிஷோர், பத்மநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரன், கனகசபை ஆகியோரும் அருட்திரு கருணாரத்தினம் அடிகளாரும் உரையாற்றினர்.

(சி)

## சிவநேசனின் பூதவுடலுக்கு பிரபா அஞ்சலி செலுத்தியபோது 14 எம்.பிக்கள் அருகில் இருந்தனர்

கிளிநொச்சி, மார்ச் 10

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சிவநேசன் எம்.பியின் பூதவுடலுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அஞ்சலி செலுத்திய சமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதினான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு பிரசன்னமாயிருந்தனர் என்று தெரியவருகிறது.

எம்.பிக்களான கஜேந்திரன், கனகரத்தினம், பத்மினி சிதம்பரநாதன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், ஜெயானந்தமூர்த்தி,

(12 ஆம் பக்கம் பார்க்க)



கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நேற்று கரவெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றன. அவரது தந்தையும் தாயும் மலரஞ்சலி செலுத்துவதை முதலிரு படங்களிலும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் இரா.வரதீஸ்வரன் அஞ்சலி செலுத்துவதை அடுத்துள்ள படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்கள் வரிசையில் நின்று அஞ்சலி செலுத்துவதை கடைசிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: சுந்தா)*

## சாரதி அனுமதிப்பத்திர பரீட்சைகளுக்கான திகதிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான எழுத்து மற்றும் செயல்முறைப் பரீட்சைகளுக்கான திகதிகள் இன்று திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பம் செய்த பரீட்சார்த்திகள் தங்களுக்குரிய எழுத்து மற்றும் செயல்முறைப் பரீட்சைக்கான திகதிகளை அலுவலக நாள்களில் நண்பகல் 12 மணிவரை யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று திணைக்கள உதவி ஆணையாளர் வி. பத்மநாதன் தெரிவித்துள்ளார். (203)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

கண் மகிழ 08 ★ 02 ★ 1940



கண் நெகிழ 23 ★ 02 ★ 2004

### அமரர் அரியகுட்டி நவரட்னம்

*(முன்னாள் உத்தியோகத்தர், ரெலிக்கொம்)*

திதி: 2008.03.10

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எம் துயரம் அப்பா
கண்களில் நீர் வடிகிறது அப்பா
துடைப்பதற்கு உங்கள் கைகள் தானில்லை அப்பா
சொல்வதற்கு நல்ல செய்திகள் நிறைய இருக்கிறது அப்பா
கேட்பதற்கு உங்கள் காதுகள்தான் இல்லை அப்பா
எங்கள் உயிர் உள்ளவரை ஆறாது உம் துயரம்
நீங்காது உங்கள் நினைவுகள் அப்பா.

*பதிவாளர் ஒழுங்கை,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (71860)

*தகவல்:*
மனைவி, மகள்.

## மரண அறிவித்தல்கள்

### நாகேந்திரம் அருமைமுத்து



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் புனித அந்தோனியார் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் அருமைமுத்து நேற்று (09.03.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி நாகேந்திரம் (கட்டட ஒப்பந்தகாரர் - முத்து) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற கந்தர்-சின்னப்பிள்ளை தம்பதியினரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை, மாணிக்கம், கண்மணி, செல்லத்துரை (ஆசிரியர்), அரியதுரை (ரெயில்வே ஊழியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திலகவதி, நந்தாவதி, அருமைரத்தினம் (முன்னாள் ஊழியர், சிமெந்துக் கூட்டுத் தாபனம்), நவரத்தினம் (தபால் ஊழியர், தெல்லிப்பழை), குலரத்தினம் (கட்டடக் கலைஞர்), திலகரத்தினம் (பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயும், இராமச்சந்திரன், சுப்பிரமணியம் (முன்னாள் அதிகாரி, தேசிய கல்வி நிறுவனம் ), ராதா, தேவநங்கை, அரியலதா, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், ரதிவதனா கோணேஸ் (ஆசிரியர்), றஜித்தா, சிவகுமார், ரஞ்சினி, திவாசினி, றயனகுமார், றயனி (குடும்பநல உத்தியோகஸ்தர்), தினேஸ்கரன் (யூனியன் கல்லூரி மாணவன்), உமாசுதன் (கணனிப்பொறியியலாளர்), கன்னியாகுமாரி (ஆசிரியை, பம்பலப்பிட்டி), கோபிசுதன் (வங்கி உத்தியோகத்தர்), சர்மிலா (மாணவி), சந்திரகாந் (கட்டட ஒப்பந்தகாரர்), கௌரி, கஜன், ரஜீபன், ஜமுனா (பல்கலைக்கழகம், மட்டக்களப்பு), தர்சன் (மாணவன்), தேவரூபன் (சிறைச்சாலை உத்தியோகத்தர்), நவசாந்தன் (மாணவன்), மோகனராம் (மாணவன்), புஸ்பரேகா (மாணவி), புஸ்பரேகன் (மாணவன்), புஸ்பஅஞ்சலி (மாணவி), அனுசா (மாணவி), திலக்சன், திலக்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மோகனப்பிரதா, தர்சிகா, முகேஸ்குமார் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் மல்லாகம் நீதிமன்ற வீதியிலுள்ள இராமசந்திரன் திலகவதியாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் றொட்டியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*தகவல்:*
(A) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நாட்டுக்கூத்துப் போட்டி ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச் 10

யாழ்.மாவட்ட கலாசார பேரவையால் நடத்தப்படவிருந்த நாட்டுக்கூத்துப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி தெரிவித்தார்.

நிகழ்ச்சியை நடத்துவதற்கான மண்டபத்தை பெற முடியாத நிலையில் போட்டி ஒத்திவைக்கப் பட்டுள்ளது என்றும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## ஆறு.திருமுருகன் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக நியமனம்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக 'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுருகன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேரவை உறுப்பினராக நியமனம் பெற்றிருந்த அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் சுகயீனம் காரணமாக பதவியை பொறுபேற்க முடியாதுள்ளதாக அறிவித்ததை தொடர்ந்து ஆறுதிருமுகன் நியமிக்கப்படுள்ளார்.

சமய மற்றும் சமூகப்பணிகளில் ஈடுபடும் இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். (அ-1)

## வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தர் அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச் 10

வெட்டுக்காயம் மற்றும் அடிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் குடும்பஸ்தர்நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அனலைதீவு, 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ரி.விக்னேஸ்(வயது-25) என்பவரே இவ்வாறு காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் குறிப்பிட்ட நபரின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாதவர்கள் இவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் தனது வீட்டு விறாந்தையில் தனியாக உறங்கிக் கொண்டிருந்தார் எனவும் காயப்பட்ட இவருக்கு அருகில் அலவாங்கு ஒன்று காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 2 மணியளவில் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குஇவர்கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது . (1-203-78)

## மரண அறிவித்தல்

### திருமதி பாலசிங்கம் நீலா

வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதி, நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பாலசிங்கம் நீலா நேற்று (09.03.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கத்தின் (ஆனந்தம்-காபிறேட்டர்) மனைவியும் ஜெயானந்தன், ஜெயந்தி, ஜெயசுதா ஆகியோரின் தாயும், கந்தையா - தங்கப்பிள்ளை தம்பதியினரின் மகளும், சின்னையா- பூரணம் தம்பதியினரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.

***சிவப்பிரகாசம் வீதி,***
***வண்ணார்பண்ணை***

*தகவல்:*
(c) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### இராசதுரை இன்பதேவி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட இராசதுரை இன்பதேவி நேற்று (09.03.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை-சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், சந்தனேஸ்வரன் (கனடா), இராஜேஸ்வரன் (பிரான்ஸ்), கருணாதேவி (மட்டக்களப்பு), காலஞ்சென்ற பவானிதேவி, லலிதாதேவி (இந்தியா) ஆகி யோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.03.2008) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***864, கே.கே.எஸ். வீதி,***
***யாழ்ப்பாணம்.*** (71862)

தகவல்:
குடும்பத்தினர்

### சுப்பிரமணியம் நடராசா

(ஓய்வுபெற்ற ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர், ஏயிற்லைன், யாழ்ப்பாணம்)



மூளாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நட ராசா 05.03.2008 புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் பாசமிகு கணவரும், ரவீந்திரன் (கனடா), ரவிச்சந்திரன் (கனடா), ரவிகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலட்சுமி, சந்திரலீலா, தசாரூபவதியின் பாசமிகு மாமனாரும், மஞ்சுபாஜினி, ரவிவர்மன், கஜன், மயூரன், நிசாந்தினி, லக்ஸ்மன், புருஷோத்தமன ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், கந்தையா, செல்லம்மாவின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2008) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*தகவல்:*
**மூளாய்.** (சி/551783) திருமதி ந.தனலட்சுமி *(மனைவி).*

### கந்தையா கனகரட்ணம்

(ஓய்வு பெற்ற கிராம சேவை அலுவலர்,பளை)



தம்பகாமம், பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கிளிநொச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகரட்ணம் நேற்று (09.03.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா மற்றும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் நல்லம்மா தம்பதினரின் மருமகனும், புஸ்பஞானதேவியின் அன்புக் கணவரும், ஜெயஸ்ரீ (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பளை) தவகணேஸ்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரஸ்வதி, சபாரட்ணம், சிவஞானம் (நோர்வே), அன்னபூரணம்(ஜேர்மனி), புவனேஸ்வரி, பரமசிங்கம், செல்வதி (நோர்வே), மனோகரன்(நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவானந்தராஜா ,சிவகௌரி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் மங்கயன், தர்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் கந்தசாமியின் மைத்துனரும், செல்லாச்சி மற்றும் காலஞ்சென்ற பாக்கியம் ஆகியோரின் பெறாமகனும் கணபதிப்பிள்ளை ராசரத்தினம் (ஆஸ்திரேலியா) கந்தசாமி, அரியராசா ஆகியோரின மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.03.2008)திங்கட்கிழமை அன்னாரின் கிளிநொச்சி இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***சந்தன மாதா வீதி,***
***சுண்டுக்குளி*** (B)

தகவல்:
பொ.வெற்றிவேல்

# உரும்பிராய் விவசாயப் பிரிவில் 17 நெல் இனங்கள் அறிமுகம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

உரும்பிராய் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் அண்மையில் நடந்த வயல் விழாவின் போது 14 புதிய இனங்கள் உட்பட 17 நெல் இனங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன.

3 மாத நெல் இனங்களான AT- 303, AT- 307, BW- 03 1063 ஆகியவையும் -

3 1/2 மாத நெல் இனங்களான BW-361, AT- 353, AT- 370, AT-6683, LD -04 -2236, BG- 357 ஆகியவையும் -

4 1/2 மாத நெல் இனங்களான AG-406, AT- 507, AT- 401, AT-402 ஆகியவையும் -

ஒப்பீட்டு இனங்களான $H_4$,முருங்கன், பச்சைப் பெருமாள், மொட்டக்கறுப்பன் ஆகியனவையும் வயல் விழாவில் அறிமுகப்படுத்தப்பட்டன.

இருபாலைக் கிழக்கில் பிரதி விவசாயப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்வயல் விழாவில் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராகவும் யாழ்.கமநலத் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி செ.விஜயரட்ணம், ஐ.நா.அபிவிருத்தித் திட்ட அலுவலகப் பொறுப்பதிகாரி கு.வி.நிஷாந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். (202)

அறவழிப் போராட்டக் குழுவின் ஏற்பாட்டில்

# மகளிரின் ஆற்றல் வெளிப்பாட்டு கண்காட்சியும் அனுபவப் பகிர்வும்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி அறவழிப் போராட்டக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொழிற்பயிற்சிகளில் மகளிர் பயிலுநர்களின் ஆற்றல் வெளிப்பாட்டுக் கண்காட்சியும், அனுபவப் பகிர்வும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை நுணாவில் மேற்கிலுள்ள அறவழித் தொழில் பயிலகத்தில் நடைபெறவுள்ளன.

அறவழிப் போராட்டக் குழுவைச் சேர்ந்த திருமதி ஜே.யோகேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டமில் பணிப்பாளர் திருமதி இரஞ்சிதமலர் இரகுநாதன் பிரதம விருந்தினராகவும், கிராம சேவையாளர் திருமதி சி.சுந்தரலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை அனுசரணையுடன் அறவழிப் போராட்டக் குழுவால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சிகளில் மகளிர் பயிலுநர்களின் ஆற்றல் வெளிப்பாடுகளான தோல் உற்பத்தி, அலுமினியம் பொருத்துதல், மின் இணைப்பு, குழாய் பொருத்துதல், தையல் ஆகிய பயிற்சிகளின் தொழில்துறைகளின் செய்முறைகளைப் பயிலுநர்கள் இந்நிகழ்வில் செய்து காட்டவுள்ளனர்.

இத்தொழில் துறைகளில் மகளிர்கள் ஈடுபட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள சமுதாய மாற்றம், மனோபாவமாற்றம் பற்றிய அனுபவப் பகிர்வுகளும் இடம்பெறும். (203-160)



மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் வயல் விழா அண்மையில் கட்டுடையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினரான யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத்தின் முன்னாள் தலைவி திருமதி நவநீதன் ஜெகதீசனுக்கு சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியார் நெற்கதிர் வழங்கிக் கௌரவிப்பதையும் சண்டிலிப்பாய் பெரும்பாக அலுவலர் வை.பாலகிருஷ்ணன் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்தில் காணலாம். (படங்கள்: ரமேஸ்)

# கோப்பாயில் பால் விற்பனை நிலையம் இன்று திறப்பு

அச்சுவேலி,மார்ச்10

கோப்பாயில் கால்நடை வைத்திய வளாகத்தில் பால் விற்பனை நிலையத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

கோப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கா.சிவபாலன் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கால்நடை உற்பத்தி சுகாதார்த் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் சி.கே.சிவபாலசிங்கம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (203-11)

# யாழ்.ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் போதியளவு மண்எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் மண் எண்ணெய் விற்பனை ஆரம்பமாகி யுள்ளதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் கே.நவநீதன் தெரிவித்தார்.

தற்போது மண்எண்ணெய் விநியோகம் சீராக நடைபெற்று வருவதால் நுகர்வோர் சங்கக் கிளைகளில் போதியளவு மண்எண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

முதற்கட்டமாகச் சங்கத்தின் 17, 21, 22, 23, 24, 25, 27 ஆகிய கிளைகளுக்கு மண்எண்ணெய் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஏனைய கிளைகளுக்கும் விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202-224)

# சமூக அபிவிருத்தி மன்றத்தால் பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 10

சமூக அபிவிருத்தி மன்றம் 2008ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

நல்லூர், கோப்பாய், யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, உடுவில், பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த மன்றம் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

விவசாயிகள், விதவைகள், ஊனமுற்றோர், இடம்பெயர்ந்தோர், பெற்றோரை இழந்தோர், 'வயது வந்தும் திருமணமாகாதோர், பாடசாலை மாணவர்கள் என ஒவ்வொரு பிரிவினரும் இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பயிற்சி வகுப்புகள் நடத்தல், கண்பார்வையற்றவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல், மாணவர்களுக்கு சைக்கிள் கடன் வழங்கல், சுகாதாரம் தொடர்பான கருத்தரங்குகள் நடத்துதல், மரம் நடுகை, சிறுவர் கழகங்கள் அமைத்து வழிப்படுத்துதல், சிறுவர், முதியோர் கௌரவிப்பு, கலை சலாசார நிகழ்வு நடத்தல், சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கல் போன்ற திட்டங்கள் மன்றத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (203)

# யாழ்.மாவட்ட குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு 17 ஆம் திகதி தொடக்கம் தடைதாண்டல் பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ்.மாவட்ட குடும்பநல சேவை தரம் II 'ஆ' பிரிவு உத்தியோகத் தர்களுக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் வினைத் திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை நடைபெறவுள்ளது.

வாய்மொழிப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி 501 - 534 வரையான இலக்க சுட்டெண் உடையவர்களுக்கும், எதிர் வரும் 18 ஆம் திகதி 535 - 554 வரையான இலக்க சுட் டெண் உடையவர்களுக்கும் எதிர் வரும் 19 ஆம் திகதி 555-576 வரையான இலக்கச் சுட்டெண் உடையவர்களுக்கும் நடைபெறவுள்ளது.

செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி தெல்லிப்பழைச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அப்பணிமனைப் பிரிவுக்குட்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் -

25 ஆம் திகதி கோண்டாவில் பிர தேச வைத்தியசாலையில் கோப்பாய், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்குட்பட்ட உத்தி யோகத்தர்களுக்கும்-

26 ஆம் திகதி சங்கானைப் பிரதேச வைத்தியசாலையில் மானிப்பாய் சுகா தார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவுக் குட்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் -

27 ஆம் திகதி பருத்தித்துறை சுகா தார வைத்திய அதிகாரி பணிமனையில் அப் பணிமனைப் பிரிவுக்குட்பட்ட உத்தியோகத் தர்களுக்கும் -

28 ஆம் திகதி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அப் பணிமனைப் பிரிவுக்குட்பட்ட உத்தியோகத் தர்களுக்கும் -

29 ஆம் திகதி கோண்டாவில் பிர தேச வைத்தியசாலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் பணியாற்றும் உத்தியோகத் தர்களுக்கும் நடைபெறவுள்ளது. (202)




# வைத்தியசாலையிலுள்ள சடலத்தைப் பொறுப்பேற்குமாறு கோரிக்கை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்தவரின் சடலத்தைப் பொறுப்பேற்குமாறு மாவட்ட வைத்திய அதிகாரி உறவினர்களைக் கோரியுள்ளார்.

வரணி வடக்கைச் சேர்ந்த எஸ்.ஆறுமுகம் (வயது 69) என்பவர் சிகிச்சைக் காக வைத்தியசாலையில் கடந்த 2 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பலனின்றிக் கடந்த 5 ஆம் திகதி அவர் மரணமானார். வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அவரது சடலத்தை உறவினர்களைப் பொறுப்பேற்குமாறு வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (202)

# சிவநேசன் எம்.பியின் படுகொலைக்கு பல்வேறு அமைப்புகளும் கண்டனம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் கடந்த வியாழக் கிழமை கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்துப் பல்வேறு அமைப்புகளும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

**யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்**

தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வாதார உரிமைக்காகக் குரல்கொடுத்த இன்னொரு மகத்தான மனிதனையும் அநியாயமான வழியில் இழந்து நிற்கின்றோம். எமது மக்கள் மீதான மோசமான மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தியும், துயர்சுமக்கும் எமது மக்களோடு துணையாக நின்றும் சேவை செய்தவர் அமரர் சிவநேசன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியாக மக்களின் வாக்குகள்மூலம் தெரிவு செய்யப்பட்ட அவர் எமது பல்கலைக்கழகம் முன்னெடுத்த அனைத்துச் செயற்றிறன் மிகு எழுச்சிகளிலும் பங்கேற்று, ஆதரவு தந்தவர்.

இவரது படுகொலையை வன்மையாகக் கண்டிப்படுடன் அரசியற் தலைவர்களை, ஜனநாயகவாதிகளை இலக்கு வைக்கும் இழிநிலை கைவிடப் படவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம். - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பத்மினி சிதம்பரநாதன் (நா.உ)**

அரசின் பயங்கரவாதச் செயல்களால் அரசியல்வாதிகள் கல்வியியலாளர்கள், மதத்தலைவர்கள், பெண்கள், குழந்தைகள், மாணவர்கள் என்று அனைத்துத் தரப்பினருமே பாதிக்கப்பட்டுள்ளனர். முன்பு நத்தார் ஆராதனையின்போது நாடாளுமன்ற உறுப்பினரும் மாமனிதருமாகிய ஜோஸப் பரராஜசிங்கமும், உயர்பாதுகாப்புப் பகுதியில் வைத்து மாமனிதர் ரவிராஜும் படுகொலை செய்யப்பட்டனர். அரசின் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றி சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மிகக் கடுமையாக விமர்சித்துள்ளன.

இத்தகைய கொடுமையான செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க சர்வதேச சமூகம் கடுமையான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் சமூக உணர்வும், அரசியல் விழிப்புணர்வும், நிர்வாகத்திறமையும் மிக்க இவர் அடிநிலை மக்களின் மேம்பாட்டில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். இவர் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தபின் நாடாளுமன்ற உறுப்பினர்களையே காணாத பல கிராமங்கள் இவரைக் கண்டுகொண்டன. குறைகளைக் கேட்டுத் தன்னால் முடிந்த பணிகளைச் செய்துள்ளார். - என்று தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஓய்வூதியக் கொடுப்பனவு

வலி.தென் மேற்கு,மார்ச்10

அரச ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான இந்த மாதத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப் பனவு நாளை செவ்வாய்க்கிழமை வங்கி கள் ஊடாக வழங்கப்படவுள்ளது. (203-135)


## வாழ்த்தி வரவேற்கின்றோம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின்
கல்விப்பணிப்பாளராக இன்று
கடமையேற்கும்
திருமதி
**அ.வேதநாயகம்**
அவர்களை கல்விப் பணியாற்றப்
பெருமகிழ்வுடன் வருக
வருகவென வரவேற்று
நிற்கின்றோம்



நல்லூர். (சி/551781) கோட்டக்கல்வி அலுவலர்,அதிபர்கள்.



ஏழாலை மத்தி, ஏழாலை

## வசந்தி கோயிலென விளங்கும் அருள்மிகு பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

### வருடாந்த உற்சவம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் சர்வசித்து வருஷம் மாசி மாதம் 28ஆம் நாள் 11.03.2008 செவ்வாய்க் கிழமை பூர்வபக்க பஞ்சமித் திதியும் ரேவதி நட்சத்திரமும் சதுர்த்தி சித்தயோகமும் கூடிய சுபவேளையில் காலை 10 மணிக்கு கொடியேற்ற அம்பிகையின் திருவருள் கூடியுள்ளது. புன்னாலைக் கட்டுவன் சிவஸ்ரீ தியாகசெங்காதரக் குருக்கள் கொடியேற்றி ஆரம்பித்துவைப்பார்.

தொடர்ந்து 11 நாள்கள் தினசரி காலை 8 மணிமுதல் 2 மணிவரை விசேட அபிஷேகங்களும் பூசைகளும் இடம்பெற்று எம்பெருமாட்டியின் வீதி உலாவும் இடம் பெறும். பூர்த்தி நாளாகிய 11ஆம் நாள் 21.03.2008 வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெற்று கொடியிறக்கும் வைபவம் மாலை 3 மணிக்கு நடைபெறும்.

31.03.2008 நான்காம் பங்குனித்திங்கள் விசேட பூசைகளும் திருக்குளிர்த் தியும் நடைபெறும். காவடி, கற்பூரச்சட்டி, பாற்செம்பு ஆகிய நேர்த்திக்காரர்கள் ஆலயத்துடன் தொடர்புகொண்டு தங்கள் நேர்த்திகளைச் செலுத்தவும்.

(71827) - ஆலய பரிபாலகர் - வசந்தி அம்மன்.



## University of Jaffna Sri Lanka Faculty of Graduate Studies

### Registration for Postgraduate Courses M.Phil & PhD - 2008/09

Applications are invited from qualified persons for enrollment to the Master of Philosophy (M.Phil.) and Doctor of philosophy (Ph.D,)Degree Programmes offered by the Faculty of Graduate Studies.

. Relevant information and prescribed application forms can be obtained, from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University 0f Jaffna T.P No. : 021 222 3808) on production of a receipt in support of a payment of Rs. 100/- to the University.Account 90501 at the People's Bank, University Branch, Thirunelvely or forwarding a money order of Rs. 100- drawn In favour of "The Bursar, University of Jaffna". Requests by post should be accoompanied, by a self - adressed envelope not less than 22.5 x 10 c.m. (9" x 4") in size affixing stamps to the value of Rs. 40/- from and will be entertained between 17th March, 2008 and 30th April 2008.

Duly completed applications should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies on or before 30th April *2008.* Late and incomplete applications will be Rejected.

Registrar
*07.03.2008* (சி/551750)



## Scholarship for Tally Training

AAT, CIMA, CMA, IAB, Chartered(SL), HND, HNDA, பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், A/L மாணவர்கள் மற்றும் கணக்கியலில் ஆர்வமுடையவர்கள் இத்தேர்வில் பங்குபற்றலாம்.

30 நிமிடங்கள் மட்டுமே நடைபெறும் இப்பரீட்சையில் வர்த்தகம் மற்றும் கணக்கியல் சம்பந்தப்பட் 30 கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். எமது நிலையங்களிலேயே நடைபெறும். இப்போட்டிப் பரீட்சையில் பங்குபற்றி 60% வரையிலான கட்டணக்கழிவை பெற்முடியும்.

Accountancy Intelligence Test

Win upto 60% Scholarship

Tally கணக்கியல் மென்பொருள் கற்கைநெறி (Certified Computer Accountant)

Tally ies 9.0 Training

AIT 2008
Accountancy Intelligence Test
Super Exclusive Offer
March 5th to April 6th

முன்பு கல்விக்கு ஏற்ற வேலை
இனி வேலைக்கு ஏற்ற கல்வி
REGISTRATION IN PROGRESS

விரையுங்கள் வெற்றி பெறுங்கள்!

மேலதிக விபரங்களுக்கு

CSC Computer Software College (Asian Bussiness College)

101, 2ம் மாடி ஸ்டான்லி வீதி,
(மக்கள் வங்கிக்கு மேல்)
யாழ்ப்பாணம். Phone - 021 -222 8196


## மத்தியஸ்தர் தினவிழா

யாழ்ப்பாண்ம்,மார்ச்10

சங்கானை மத்தியஸ்தர் சபையின் இரண் டாவது ஆண்டு நிறைவையொட் டிய மத்தி யஸ்தர் தினவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வட்டு.இந்துக் கல்லூரி வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

மத்தியஸ்தர் சபைத் தலைவர் வை. சிவ பாலன் தலைமையில் நடைபெற வுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ். அரச அதிபர்கே.கணேஷ்ஆகியோர்கலந்துகொள்வர்.

## காலாவதியான பப்படம் விற்றவருக்கு எச்சரிக்கை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் காலாவதியான பப்படத்தை விற்பனை செய்த நடைபாதை வியாபாரி ஒருவர் சுகாதாரப் பரிசோதகரால் எச்சரிக்கை செய்யப்பட்டார். அத்துடன் அவர் விற்பனை செய்த பப்படம் அழிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

குறிப்பிட்ட நபர் விற்பனைசெய்த பப்படத்தை நுகர்வோர் ஒருவர் வாங்கியபோது அது காலாவதியானமை தெரியவந்தது. இதனை அடுத்து இந்த விடயம்,தொடர்பாக அவர் யாழ். மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகருக்கு அறிவித்திருந்தார்.

அவர் குறிப்பிட்ட வியாபாரியை எச்சரித்ததுடன் அவர் வைத்திருந்த காலாவதியான பப்படங்களையும் அழிக்க ஏற்பாடு செய்தார்.

(203-135)

## 'காவிய நாயகன்' நாடக நிகழ்வு வியாழன் ஆரம்பம்

குருநகர்,மார்ச் 10

இயேசு கிருஸ்துவின் திருப்பாடுகளைச் சித்தரிக்கும் ''காவிய நாயகன்" இசை, உரை நாடகம் எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் நான்கு நாள்கள் யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ் திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். திருமறைக் கலாமன்றத்தினால் வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் இப்பக்தி நிகழ்வு இந்நிகழ்வுகளில் தினமும் மாலை 4.30 மணிக்கு இடம் பெறும்.

ஆசனங்களில் அமர்ந்திருந்து இக் காட்சிகளைக் காண விரும்புவர்கள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் தமது பதிவுகளை யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தில் மேற்கொள்ள லாம் என மன்றத் தினர் அறிவித்துள் ளனர். (203-51)

## உங்களுள் பாவம் இல்லாதவன் முதலில் கல் எறியட்டும்

குற்றம், குறைகள் செய்வது மனித இயல்பு, அவற்றை மன்னித்து எம்மை ஏற்றுக் கொள்வது தெய்வத்தின் இயல்பு.

நம் ஆண்டவர் இயேசு மன்னிப்பின் இறைவன் இரக்கமும் மனதுருக்கமும் உடையவர். உள்ளங்களை ஆய்ந்து அறிபவர் விபச்சாரத்தில் பிடிபட்டு குற்றவாளியாக்கப்பட்டு இயேசுவின் முன்னிலையில் நிறுத்தப்பட்ட பெண்ணின் உள்ளத்தை அறிந்தவராக அவளை 'அம்மா' என்று அழைத்து ''எவரும் தீர்ப்பிடவில்லையா?'' என கேட்டு ''நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. இனிப் பாவம் செய்யாதீர்'' என்றார். அப்பெண் தன் பாவ வாழ்வை உணர்ந்து பாவ மன்னிப்பின் அனுபவத்தை பெற இயேசு உதவி செயதார்.



நாமும் பாவமன்னிப்பின் அனுபவத்தை பெறாதிருந்தால் அதை இக்காலத்தில் பெற்றுக் கொள்வோம். ''இயேசுவே நான் ஒரு பாவி, என்னுடய பாவங்களை மன்னியும், என்னுடைய வாழ்வில் வருமாறு உம்மை வரவேற்கிறேன், எனக்கு நித்திய வாழ்வு வேண்டும்'' என்று வேண்டும் பொழுது எமக்குள்ளே பெரிதானதொரு மாற்றத்தை அனுபவிப்போம். அனேகமாக நாம் எமது மனத்தினால் புரிந்து கொள்ள முயற்சிக்கின்றோம். எவ்வ ளவு கஷ்டமாக முயற்சித்தும் அறிவு பூர்வமான காரியங்களைக் காண முற்படுவதால் இத்தகைய வாழ்வை மாற்றும் அனுபவத்தை பெற முடியாது. இது இறைவனுடைய ஈவு-பரிசு. அவர் எம்மை அன்பு செய்வதால் கொடுக் கப்பட்டதாகும்.

அடுத்தபடியாக நாம் பிறரை குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கும் இயல்புடையவர்களாக காணப்படுவோமானால் ''உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் கல் எறியட்டும்'' (யோவா 8:7) என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவில் கொள்வோம். அப்பொழுது நான் யார் என்பதை அறிந்து கொள்வேன்.

நம் ஆண்டவர் இயேசு மனிதனாகப் பிறந்தும் பாவம் அறியாதவர், பிறப்பிலிருந்து மரிக்கும் வரை பாவமே செய்யாதவர். அவர் ஒரு பரிசுத்தமான, நீதியான, உண்மையான மனிதர். ''மற்றவர்கள் நித்திய வாழ்வை அடையும்படி நான் கல்வாரியின் சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கின்றேன்'' என்று விரும்பினார்.

**இயேசுவானவர் பாவிகளுக்கு மீட்பைகொடுக்கும்
பொருட்டு தன்னைக் தானே சிலுவையில் பலியாக
ஒப்புக் கொடுத்து இறைவனின் திட்டத்தை
நிறைவேற்றினார். பாதாளம் அவரை ஆட்கொள்ளவில்லை
அவர் மரணத்தை வெற்றிசிறந்து, பாவம், சாபம்,
அலகையின் வல்லமையை மேற்கொண்டார். அவர்
உயிர் வாழ்கின்றார். அவர் உயிரோடெழுந்து
பரலோக தந்தையின் வலப்புறம் வீற்றிருக்கிறார்.
அவர் எங்கள் பாவங்களை மன்னித்து எம்
தேவைகளைச் சந்திப்பார்.**

Sr. டிலோசியா (தி.கு)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்10

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் வீ. மீனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா. சின்னத்தம்பியும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவமும் கலந்துகொள்வர்.

(203)

## புலோலியில் களஞ்சிய அறை திறப்பு விழா

வடமராட்சி,மார்ச்10

தேசநிர்மாண அமைச்சின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க களஞ்சிய அறையின் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை சங்கத் தலைவர் பி.ஆறுமுகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு களஞ்சிய அறையைத் திறந்து வைப்பார்.

(202-160)


## மரண அறிவித்தல்கள்

### குருஞானசுந்தரம் யோகராணி



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் மாத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட குருஞானசுந்தரம் யோகராணி மாத்தளையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் கந்தசாமி காலஞ்சென்ற நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் குருஞான சுந்தரத்தின் மனைவியும் குமுதினி, குமரகுருகாந், குருசாலினி ஆகியோரின் அன்புத்தாயும் செல்வராணி, செல்வராசா, காலஞ்சென்ற யோகராசா, யோகராணி, சுகிர்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், தேவிகாராணி, சிவகணேஸ், டொறிற்றா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.03.2008) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு மாத்தளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அ.செல்வராசா
*செம்மணி வீதி(ஆஸ்பத்திரி முன்பாக)*
*நாயன்மார்கட்டு.* (71857) தகவல்: சகோதரர்கள்.

### கந்தையா நடராசா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் காரைநகர் மேற்கு, சல்லையை வசிப்பிடமாகவும் வட்டு.கிழக்கு, சங்கரத்தையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 07.03.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தனம் செல்லம்மாவின் அன்புக் கணவரும், குமாரசாமி (கனடா), அமரர் பரமேஸ்வரி, சிவகுஞ்சரி, அன்னலக்சுமி, கிருஷ்ணராஜா (கனடா), பவானி ஆகியோரின் அன்புத்தந்தையும், சாந்தவதனா (கனடா), சிவலிங்கம், ஜெயராசா, ஜெகநாதன் (கண்ணன் - லக்சுமி அழகுமாடம், மாவடி), உதயகுமார் ஆகியோரின் மாமனும், கிஷாந் (கனடா), கயெந் (கனடா) , நிலக்ஷன் (கனடா), புவனேஸ்வரி, ரவிந்திரன், பரணீதரன், சிவநேசன், கங்காரன், சிவகுமார், சதீஸ்வரன், வினோதினி, டிஜீவன், காயத்திரி (கனடா) , கிருஷன் (கனடா),ரிஷிகேசன், தாட்சாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2008) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கள்ளி வீதி, சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.* (71858) தகவல்: குடும்பத்தினர்.



பாடசாலையின் அதிபர் செல்வி எஸ்.பானுமதி

# பாடசாலைக்கான தேவைகளோ ஏராளம் பணியாற்றுவதில் அதிபர், ஆசிரியர்கள் தாராளம்

சுற்றாடலில் உள்ள பிள்ளைகளில் ஒரு பகுதியினர் வேறுபாடசாலைகளை நோக்கிச் சென்றுள்ளார்கள். ஆனாலும் கூட ஏனைய இடங்களில் இருந்து இப்பாடசாலைக்கு வந்து மகிழ்ச்சியுடன் கல்வி கற்கும் பிள்ளைகளும் இருக்கவே செய்கிறார்கள். குறிப்பாக ஊரெழு, போயிட்டி, நீர்வேலி போன்ற இடங்களில் இருந்தும் கூட பிள்ளைகள் வந்து கல்வி கற்கின்றார்கள்.

கோப்பாய்க் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இன்று தனது 92 ஆவது வயதில் காணப்படுகின்றது. 1916 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இப்பாடசாலை.

அன்றைய நிலைமையிலேயே இன்றும் இப் பாடசாலை காணப்படுகிறது. ஏனைய பாடசாலைகளைப் போல் வளர்ச்சியை வெளிப்படுத்தும் புறநிலை சாயல் எதுவும்தென்படவில்லை.




பாடசாலையின் அதிபராகச் செல்வி பானுமதி செல்வரத்தினம் கடமையாற்றுகிறார்.

### இருப்பதைக் கொண்டு திருப்தி கொள்ளும் கல்விச் சமூகம்

பாடசாலையில் உள்ள வளத்தைக் கொண்டு நல்ல முறையில் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்கும் முயற்சியில் பாடசாலையின் கல்விச் சமூகம் ஈடுபட்டு வருகின்றது.

இன்று அப் பாடசாலையில் 245 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். எட்டு ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள். ஆங்கில ஆசிரியர் இல்லை. தரம் 01 முதல் தரம் 05 வரை வகுப்புகளைக் கொண்டுள்ள இப் பாடசாலை பாரிய இட நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருவதை உணரமுடிகின்றது.

இப்பாடசாலையிலும் கடந்தாண்டு இரண்டு மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளார்கள். இம்மாணவர்களுக்கு அதிபர் பணப் பரிசில்கள் வழங்கியும் ஊக்குவித்துள்ளார்.

திறந்த மண்டபத்தில் வகுப்பறைகள் நடைபெறுவதை அவதானிக்க முடிகின்றது. வகுப்பறைகள் உரிய தடுப்புகள் இடப்பட்டுபிரிக்கப்படவில்லை. வகுப்பறைகள் சேலைகள் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளன.

### பின்தங்கிய நிலையில்

பொருளாதார ரீதியில் பின் தங்கிய நிலையிலுள்ள பிள்ளைகளே பெரும்பாலும் இங்கு கற்கிறார்கள். இப் பிள்ளைகளுக்குப் பெரும் தேவைகள் உண்டென்பதை அதிபர் ஒத்துக்கொள்கின்றார். இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யதான் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டபோதிலும் பயன் கிட்டவில்லை என்பதை அதிபருடனான உரையாடலின்போது புரிந்து கொள்ள முடிந்தது.

அயல் பாடசாலைகளுக்குச் செல்லும்

## அரசு சாரா நிறுவனங்கள் மனம் வைத்தால் எவ்வளவோ செய்யலாம்

## கோப்பாய் ரோ.க.த.க.பாடசாலையின் இன்றைய நிலை

பிள்ளைகளைப்போன்று சப்பாத்து, புத்தகப் பைகள் போன்ற வசதிகள் இப்பாடசாலைப் பிள்ளைகளுக்கும் தேவை என்ற உணர்வு தென்படுகிறது.

தம் பிள்ளைகளின் இம்மாதிரி தேவைகளைக்கூட பூர்த்தி செய்யும் நிலையில் பெற்றோர் இல்லை என்பது புரிந்து கொள்ளக் கூடியது.

### பழையமாணவரின் பாராமுகம்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இருக்கின்ற போதிலும் கூடியளவு வசதி உடையதாக இல்லை. பழைய மாணவ மன்றமும் இதே நிலையில்தான் உள்ளது. படித்த பழைய மாணவர்கள் கூட இப் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

பாடசாலைகள் இன்றைய கல்வித் திட்டத்தின் கீழ் வகுப்பறைகள் ஒவ்வொரு நிறத்திலும் வகுப்பறைத் தளபாடங்களும் அதே நிறத்திலும் காணப்பட வேண்டும் என்பதற்கு ஏற்ப கிடைக்கும் பணத்தைக் கொண்டு வகுப்பறைகள் கட்டம் கட்டமாக நிறம்தீட்டப்பட்டு அழகுபடுத்தப்படுகின்றன.

கல்வி வலயமும் கோட்டமும் கூட இதற்குத் தம்மால் இயன்ற உதவிகளை வழங்கி வருவதாகவும் அதிபர் கூறுகின்றார். ஜீ.ரி. இசற் நிறுவனத்தின் உதவியுடன் மலசலகூடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மின்சார வசதியும் தளபாட வசதியும் கூட காணப்படுகின்றது.

### மாணவரின் உணவுத் தேவை

உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது. மாணவர்களின் உணவு விடயத்தில் முழுமையாக கவனம் செலுத்தப்படுகின்றது. உலக உணவுத் திட்டப் பொருள்கள் அதிபரின் அறையில் இட நெருக்கடி காரணமாகக் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. அதிபர் தனது செயற்பாட்டை அறையில் ஒரு மூலையில் மேற்கொண்டு வருவதைக் காணமுடிகின்றது.

பன்முகப்படுத்திய வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் இப் பாடசாலைக்கு கணனி கிடைக்கப் பெற்றது. ஒரு கணனியுள்ள போதிலும் அதனை முழுமையாக பயன்படுத்தும் வகையில் ஏனைய பாகங்கள் கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

### மாணவர் திறமை வெளிப்பாடு

தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள் என மாணவர்கள் கோட்ட மட்டம் சென்று திறமைகளை வெளிப்படுத்தி வலய மட்டம் வரை சென்று வருகிறார்கள். விளையாட்டைப் பொறுத்த வரையிலும் கூட இத்தகைய நிலமையே காணப்படுகின்றது.



பாடசாலைக் கட்டடம் ஒன்று

ஆசிரியர்கள் முயற்சிகளை தொடர்கின்ற போதிலும் பற்றாக்குறை பாதிப்பை உண்டாக்குகின்றது. விளையாட்டுக்குக் கூட அருகில் உள்ள தேவாலயத்துடன் காணப்படும் விளையாட்டு மைதானமே பயன்படுகின்றது.

தேவைகள்நிறைய காணப்பட்டாலும் மனநிறைவுடன் பணியாற்றும் ஆசிரிய குழாமையும் அதிபரையும் கொண்டு இப் பாடசாலை இயங்குகின்றமை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஒரு வரப்பிரசாதம் என்றே குறிப்பிட வேண்டும். பாடசாலையில் மாணவர்களுக்கான நூலக வசதி இல்லை. இதேபோன்று வகுப்பறைகளில் ஆசிரியர்களுக்கான மேசைகள், கதிரைகளுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது.

வகுப்பறைப் பற்றாக் குறையும் ஆசிரியர் பற்றாக்குறையும் கூட தரம் ஒன்றுக்கான மாணவர்களின் அனுமதியைப் பாதிக்கும் நிலைக்கு இட்டுச் செல்கின்றன. இந்தாண்டும் இக் காரணங்களினால் மாணவர்கள் அனுமதி ஒரு வகுப்புக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டே வழங்கப்பட்டுள்ளது. வகுப்பறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு உடனடியாக எட்டப்பட வேண்டும் என்பதால் பெற்றோர்களும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளார்கள்.

சிறுவர்கள் கற்கும் பாடசாலையாக இருக்கின்ற போதிலும் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு உரிய சிறுவர் பூங்காவும் கூட இல்லை. விளையாட்டு உபகரணங்கள் கூட மட்டுப்படுத்திய அளவிலேயே காணப்படுகின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் கடைக்கண் பார்வை கிடைத்தால் மட்டுமே இப் பாடசாலையின் வளக் குறைகள் பெரிதும் நிவர்த்தியாகும் என்று கூறத் தோன்றுகின்றது.

குறிப்பாக மாணவர்களுக்கான சிறுவர் பூங்கா உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், பாதணிகள், பாடசாலைப் பைகள், வகுப்பறைக்கான தடுப்பு ஸ்கிரீன்கள் போன்றவை உடனடியாகத் தேவையாக இருக்கின்றன. இத்துடன் ஒரு கட்டடம், நூலகம், சமயலறை போன்ற தேவைகளும் காணப்படுகின்றன. இதனையிட்டும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும். பின் தங்கிய இடத்தில் பொருளாதாரத் தில் பின் தங்கிய பெற்றோர்களின் பிள்ளைகள் கற்கும் இப் பாடசாலையையும் ஏனைய பிள்ளைகள் கற்கும் பாடசாலையாக உடனடியாக மாற்ற முன்வராவிட்டாலும் கூட, சில அடிப்படை வசதிகளையேனும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ✱

**நவயுகன்**

# பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளையும் கணிப்பீடு செய்வதற்கே மதிப்பீட்டுப் பணிகள்!



பாடசாலைகளில் கல்வித் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் அவதானிப்புச் செயற்பாடுகளின் தன்மை கால ஓட்டத்திற்கேற்ப புதிய புதிய வடிவம் பெற்றுவருகின்றன. இலவசக் கல்வி நடைமுறை அமுல்படுத்தப்பட்ட பின்னர் பாடசாலைகளின் மீது கல்வி அதிகாரிகளின் கண்காணிப்பு தொடர்பாக திடீர் பரிசோதனை (Flying Squad) என ஆரம்பிக்கப்பட்ட இவ்வித அவதானிப்புகள் இன்று மதிப்பீடு (Evaluation) செய்தல் என்ற நிலைக்கு வந்துள்ளது. இடையில் பரிசோதனை (Inspection), மேற்பார்வை (Supervision) என்ற பெயர்களில் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. மாவட்டக்கல்விப் பணிப்பாளர், வட்டாரக் கல்வி அதிகாரி போன்றவர்கள் தலைமையில் குழுவாகப் பாடசாலைகளுக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டு அதிபர், ஆசிரியர்களின் நிர்வாக மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளை முழு அளவில் ஆய்வுசெய்து அவர்களின் பலம், பலவீனங்களைச் சுட்டிக் காட்டும் நிலை முன்பு காணப்பட்டது. இவ்வாறான பரிசோதனைகளின்போது அதிபர், ஆசிரியர்களுக்கு 'பயம்' ஏற்படும் வகையான செயற்பாடுகளும் இடம்பெறுவதுண்டு. தமது பதவியையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி இந்த அதிகாரிகள் பாடசாலைகளை ஒரு கலக்குக் கலக்கிய காலங்களும் உண்டு.

கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களும் பொறுப்புகளின் பகிர்வுகளும் பரிசோதனை என்பதிலிருந்து மேற்பார்வை என்பதாக மாற்றமடைந்தது. பாடசாலைகளை அதிகாரிகள் தரிசித்து அங்கு நடைபெறும் விடயங்களை மேற்பார்வை செய்து தேவையான ஆலோசனைகளை வழங்கி வழிப்படுத்தவேண்டும் என்பதையே இது பிரதிபலித்தது. தமது மேலான (Super) பார்வை (Vision) மூலம் பாடசாலையைச் சீர்மிய வழியில் இயங்கச் செய்ய வேண்டுமென்பதை அடிப்படையாகக் கொண்டபோதும் இதிலும் அதிபர், ஆசிரியர்களை வெருட்சித் தன்மைக்குள்ளாக்கும் அதிகாரத் தொனிகள் காணப்பட்டன.

ஆயினும் பாடசாலைகள் தமது பண்புசார் செயற்பாட்டில் அடையும் அபிவிருத்தியினை மதிப்பீடு செய்யும் பணியாக தற்போது இது மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறான மதிப்பீடுகளை கல்வி வலய அதிகாரிகள், மாகாணக்கல்வி அதிகாரிகள், மத்திய கல்வியமைச்சு அதிகாரிகள் போன்றவர்கள் மேற்கொள்கின்றார்கள். பொதுவாக முன்னறிவித்தலுடன் இம்மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாடசாலைகள் தமக்கென தூரநோக்கினை உருவாக்கி குறித்த இலக்கினை அடைய முற்படும்போது தமது மனித, பௌதீக வளங்களை சரியாகப் பயன்படுத்தல், பாடத்திட்டங்களை உரிய முறையில் நிறைவுசெய்தல், இணைப்பாட விதானங்களினூடாக மாணவர்களின் திறன்களை வெளிக்கொணர்தல், சகலவிதமானவிருத்திகளிலும் கவனம் செலுத்துதல் போன்ற பல்வேறு அம்சங்கள், மதிப்பீடுகள் மூலம் அவதானிக்கப்படுகின்றன.

பாடசாலை ஒன்றில் அனைத்துச் செயற்பாடுகளையும் கணிப்பீடு செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேயே மதிப்பீடு அமைகிறது. நேர அட்டவணை, பரீட்சைப் பெறுபேறு, வருடாந்த அமுலாக்கல் திட்டம், மாணவர்களின் அடைவு மட்டம், பௌதீக, மனித வளங்கள் எனப் பல பிரிவுகளிலும் இக்கணிப்பீடுகள் விரிந்து செல்லும்.


பாடசாலையின் தூர நோக்கினை அடையும் வண்ணம் அதன் செயற்பாடுகளும் அனைத்து வளங்களின் பயன்பாடுகளும் இருத்தல் வேண்டும். மதிப்பீடுசெய்யும் போது பொதுமுகாமை, பாடத்திட்ட முகாமை, வளங்களின் முகாமை, மாணவர்அடைவு நிலை, இணைப்பாடவிதான செயற்பாடுகள், மாணவர் நலனோப்பல், சமூகத் தொடர்புகள் எனப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியான புள்ளித்திட்டம் அமைக்கப்பட்டு மதிப்பீட்டுப் புள்ளிகள் இடப்பட்டு அப்புள்ளிகளினூடே பண்புத்தர அபிவிருத்தியானது தீர்மானிக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் காணப்படும் பொதுப் பிரச்சினைகள் குறைகள் என்பவற்றினை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான பரிகார நடவடிக்கைகளை அதிபர் மூலமாக முன்னெடுக்கவும், ஆலோசனைகள், வழிகாட்டல்களை வழங்கவும் இம்மதிப்பீட்டின் மூலம் பெறப்படும் தகவல்கள் பெரிதும் உதவுகின்றன. மதிப்பீட்டின்போது பொருத்தமான மதிப்பீட்டுக் கருவிகளை உருவாக்கி அவற்றைப் பயன்படுத்துமாறு மதிப்பீட்டுக் குழுவினை கல்வி அமைச்சு வழிப்படுத்துகின்றது.

அக்கருவிகளில் காணப்படும் அம்சங்கள் ஒரு பாடசாலையை முழுமையாக மதிப்பீடு செய்யத்தக்கதான விடயங்களை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பண்புத்தர அபிவிருத்தி மதிப்பீட்டுச் செயற்பாடு பாடசாலைகள் சிறந்தமுறையில் தமது இலக்கினை நோக்கிச் செல்ல உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. ✱

**வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்,**
*சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.*



முருகன் துணை





# காரைநகர்- களபூமி- திக்கரை

# வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

# மண்டலாபிஷேக பூர்த்திதின

# சங்காபிஷேக உற்சவ விஞ்ஞாபனம்- 2008

திருச்சிற்றம்பலம்

**மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி**
**எவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி**
**மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்**
**சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.**

திருச்சிற்றம்பலம்

*முருகப்பெருமான் அடியார்களே,*

ஈழவள நாட்டின் வடமேற் பாகத்தில் அமைந்துள்ள காரைநகரின் கிழக்குப் பகுதியில் திக்கரை என்னும் பகுதியில் கோயில்கொண்டு எழுந்தருளி தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருள்மழை பொழிந்து கொண்டிருக்கும் முருகப்பெருமானுக்கும், விநாயகர், சண்முகப்பெருமான் முதலிய பரிவாரங்களுக்கும் மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெற்றுவருகின்ற மண்டலாபிஷேகத்தின் பூர்த்திதின சங்காபிஷேக உற்சவம் நிகழும் சர்வசித்து வருஷம் மாசி மாதம் 28ஆம் நாள் (11.03.2008) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு முருகப்பெருமானுக்கும் சண்முகப்பெருமானுக்கும் அஷ்டோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும், விநாயகர், வைரவப்பெருமானுக்கும், அஷ்டோத்தர (108) சங்காபிஷேகமும் நடைபெற்று விஷேடபூசை வழிபாட்டுடன் சண்முக அர்ச்சனையும் நடைபெறும். தொடர்ந்து பிரசாதம் வழங்கல், மகேஸ்வரர் பூசை (அன்னதானம் வழங்கல்)யும் நடைபெறும்.

இரவு உற்சவம் 6.30 மணிக்கு சாயரட்சை பூசையுடன் ஆரம்பமாகித் திருமுறை ஓதுதல் நிகழும், தொடர்ந்து விஷேட சொற்பொழிவு நடைபெற்று, விஷேட மங்கள வாத்தியங்கள் ஒலிக்க வசந்த மண்டப பூசையினைத் தொடர்ந்து வள்ளிதெய்வயானை சமேத முருகப்பெருமான் பூந்தண்டிகையில் எழுந்தருளி திருவீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் அலங்காரக் காட்சியும் நடைபெறும். அத்தருணம் அடியார்கள் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து முருகப்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

## கிரியைகள்

இன்று (10.03.2008) திங்கட்கிழமை பி.ப.6.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, கடஸ்தாபனம், யாகபூசை, பிரசாதம் வழங்கல் நிகழும்.
இன்று (11.03.2008) செவ்வாய்க்கிழமை காலை8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி சங்காபிஷேகம் நிகழும்.

**தேவஸ்தான குரு:**
**பிரம்மஸ்ரீ. கு.சரவணபவானந்த சர்மா**
**உதவிக் குருமார்கள்:**
**பிரம்மஸ்ரீ. சோ.கேதீஸ்வரக்குருக்கள்**
(கொழும்புத்துறை)
**பிரம்மஸ்ரீ.ச.கணநாத சர்மா**
(கொழும்புத்துறை)
**பிரம்மஸ்ரீ. ம.விமலேஸ்வர சர்மா**
(காரைநகர்)
**பிரம்மஸ்ரீ.க.கிரிதர சர்மா**
(காரைநகர்)
**பிரம்மஸ்ரீ.சு.சுஜீபர சர்மா**
(காரைநகர்)
**பிரம்மஸ்ரீ.ச.ஷண்மதுர சர்மா**
(காரைநகர்)

ஒலி, ஒளி அமைப்பு:
திரு.மேகவண்ணன் குழுவினர்
(நாச்சிமார் கோயிலடி)

**குருமார் விவரம்:**
**சிவஸ்ரீ. ச.சண்முகானந்தக் குருக்கள்**
(மயிலணி)
**சிவஸ்ரீ. பா.பாலகிருஷ்ணக் குருக்கள்**
(அராலி)
**சிவஸ்ரீ.செ.க.சிவசுப்பிரமணியக் குருக்கள்**
(அராலி)
**சிவஸ்ரீ. சோ.வாகீஸ்வரக் குருக்கள்**
(கந்தரோடை)
**சிவஸ்ரீ.ப.சண்முகேஸ்வரக் குருகள்**
(கோப்பாய்)

ஒலி, ஒளி:
திரு.மேகவண்ணன்

கட்டட நிர்மாணம்:
திரு.தவபாலன்
(நவாலி)

மங்களவாத்தியம்:
திரு.சு.மந்திரமூர்த்தி குழுவினர்
(காரைநகர்)

**சாதகர்கள்:**
**பிரம்மஸ்ரீ. எஸ்.ஜெகதீஸ்வர சர்மா**
(ஆனைக்கோட்டை)
**பிரம்மஸ்ரீ. எஸ்.சிவபால சர்மா**
(இணுவில்)
**பிரம்மஸ்ரீ.ப.சிவானந்த சர்மா**
(கோப்பாய்)
**பிரம்மஸ்ரீ. கு.சற்குணராஜ சர்மா**
(காரைநகர்)

மாலை அலங்காரம்:
திரு.துஷ்யந்தன் (சங்கானை)

மின் இணைப்பு:
திரு.மணிவண்ணன்
(வட்டுக்கோட்டை)

ஆசாரி:
திருநாவுக்கரசு சண்முகவடிவேல் ரூபன்

குறிப்பு: பால், தயிர், இளநீர், பூ, பூமாலை முதலியவற்றைத் தந்து முருகன் அருள் பெறுவீர்களாக.

**உற்சவத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.**

அன்னதானத்தில் அடியார்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## விசேட நிகழ்ச்சிகள்

மங்கள இசை:
ஈழநல்லூர் உதயசங்கர் குழுவினர் (சங்கர்),
K.R.சுந்தரமூர்த்தி குழுவினர், V.K. கானமூர்த்தி குழுவினர்.

வில்லுப்பாட்டு:
யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி
ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினர் வழங்கும்
திருமுறை தந்த பெருமகனார்.

சமய சொற்பொழிவு: திரு.செல்வவடிவேல்

அடியார்கள் யாவரும் வருகை தந்து முருகப்பெருமானின் இஷ்டசித்திகளை பெற்றுய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

**காரைநகர், களபூமி.** **S.V.முருகேசு குடும்பத்தினர்.**

(71817)



ஆட்டநாயகனும் சிறந்த பந்து வீச்சாளருமான க. நிரோஜன்



சிறந்த துடுப்பாட்டக்காரர் எ. ஜெலன்ஸ்



சிறந்த களத் தடுப்பாளர் ப.தயாளன்



சகலதுறை ஆட்டக்காரர் யோ.ரஜீவன்

# துல்லியமான பந்து வீச்சு, களத்தடுப்பு; கேடயத்தைக் கைப்பற்றியது ஸ்கந்தா அணி

## ஆட்ட நாயகனாகவும் சிறந்த பந்து வீச்சாளராகவும் நிரோஜன் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச்10

'உதயன்' அனுசரணையுடன் இடம் பெற்ற 'வீரர்களின் போர்' எட்டாம் ஆண்டு துடுப்பாட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஒரு இன்னிங்ஸ் 45 ஓட்டங்களினாலும் வெற்றி பெற்று சாதனையைப் பதிவு செய் துள்ளது.

முதல் நாள் ஆட்டத்தின்போது ஸ்கந்த வரோதயாக் கல்லூரி 9 விக்கெட்டுகளை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தி மகாஜனக் கல்லூரி துடுப்பெடுத்தாட வழியேற்படுத்தியது.

முதல் நாள் துடுப்பாட்டத்தில் 5 விக்கெட்டுகளை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல்நாள் ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமாகி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வீரனின் முதல் பந்து வீச்சிலேயே மகாஜனக் கல்லூரி தனது இரண்டாம் நாள் ஆட்டத்தின் முதல் விக்கெட்டைப் பறிகொடுத்தது.

தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டையும் கூட இரண்டாம் நாள் ஆட்டத்தில் ஓர் ஓட்டம் பெற்ற நிலையில் பறி கொடுத்தது.

பலத்த எதிர்பார்ப்புடன் இருந்த ரசிகர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் சலனத்தையும் ஏமாற்றத்தையும் இவ்விரு விக்கெட் இழப்புகளும் ஏற்படுத்தின.

ஆனாலும் அடுத்து வந்த வீரர்கள் இந்த நிலைமை தொடராமல் பாதுகாத்துக் கொண்டனர். தொடர்ந்து விளையாடிய வீரர்கள் அணியின் ஓட்ட எண்ணிக்கையை 47 ஓவர்களில் 118 ஓட்டங்களாக உயர்த்திய நிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தார்கள்.

மகாஜனக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் எம்.எல்மோநிக்ஷன் 31 ஓட்டங்களையும் எம். கோகுலதாஸ், கே.திலீபன் ஆகியோர் தலா 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் அணித் தலைவர் கே.நிரோஜன் 11 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவரு டன் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், கே.விஷ்ணுபிரகாஸ் 17 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 30 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், அணியின் உப தலைவர் ஜே.ரஜீவன் 14 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கே.பென்ஜோய் 4 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

128 ஓட்டங்களுடன் முன்னிலையில் நின்ற ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸிலும் மகாஜனக் கல்லூரியையே துடுப்பெடுத்து ஆடும்படி வேண்டியது.



இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரியின் ஆரம்ப ஆட்டக்காரர்கள் தொடக்கத்தில் சற்று நிதானமாக விளையாடினார்கள். இந்நிலைமையைத் தொடர்ந்தும் பேண முடியாத நிலைமை சற்று நேரத்தில் காணப்பட்டது.

ஆட்டம் சமநிலையில் முடியும் என எதிர்பார்த்து ரசிகர்கள் காத்திருந்த வேளையில் ஆட்டம் திடீர் மாற்றத்திற்கு உள்ளானது. மகாஜனக் கல்லூரி தோல்வி என்ற நிலைமைக்கு மாற்றம் ஏற்பட்டது.

இரண்டாவது இன்னிங்ஸில் 37.4 ஓவர்களில் 83 ஓட்டங்களைப் பெற்று மகாஜனக் கல்லூரி அனைத்து விக்கெட்டு களையும் இழந்தது. ஸ்கந்தா வீரர்களின் துல்லியமான பந்து வீச்சால் மகாஜனவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

மகாஜனக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய எம். கஜதீபன் 15 ஓட்டங்களையும், அணியின் உப தலைவர் கே.மாதவன் 14 ஓட்டங்களையும், எம். கோகுலதாஸ் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

### 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார் ஸ்கந்தாவின் அணித் தலைவர்

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில்

(10ஆம் பக்கம் பார்க்க)

# சென்.பற்றிக்ஸ் முன்னிலையில் நின்றபோதும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பொறுப்பான ஆட்டம்

## சமநிலையில் முடியக் காரணமாயிற்று



இரு அணித்தலைவர்களும் வெற்றிக் கிண்ணத்தைப் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணம்,மார்ச்10

'பொன் அணிகள் மோதல்' என வர்ணிக்கப்படும் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரில் 25ஆவது தடவையாக இவ்வருட ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

91 ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் இந்த ஆட்டத் தொடரில் ஏற்கனவே 24 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருந்தன.

இவ்வருட ஆட்டத்திலும் 279 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி இருந்தபோதும் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்திருக்கிறது.

முதல் நாள் ஆட்டத்தின் போது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 5 விக்கெட்டுகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறைவுபெற்றிருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த யாழ்ப்பாணக் கல்லூரி ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தில் தனது முதலாவது விக்கெட்டை இரண்டாவது ஓவரில் பறிகொடுத்தது. தொடர்ந்து விளையாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 72.2 ஓவர்களுக்கு 129 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் வி.ஜோய் சிகான் -42, பி.சிறிகுகன் - 18, எஸ். கோமளதரன் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய எம்.வி.கமில்டன் 11 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் எம்.டி. சஜீந்திரன் 15 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களுகக்கு 3 விக்கெட்டுகளையும் ரி.லவதீசன் 18 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 44 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் மற்றும் வை.சதானந்தன், எம். ஏ.நிலோசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

150 ஓட்டங்கள் முன்னிலையில் நின்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடும்படி யாழ்ப்பாணக் கல்லூரி அணியை வேண்டிக் கொண் டது.

இரண்டாவது இன்னிங்ஸில்துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்கள் தமது நிலையையும் பொறுப்பையும் உணர்ந்து மிகவும் அவதானமாகத் துடுப்பெடுத்தாடினார்கள். இதன் மூலம் ஆட்டம் சமநிலையில் முடிவடையக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரி இரண்டாவது இனிங்ஸில் 73 ஓவர்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து 118 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய ஜே.செந்தூரன் 66 ஓட்டங்களையும், பி.சிறிகுகன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொண் டார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் எஸ். மிலான்டோ ஜெனிபர் 21 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் எம். ஏ.நிலோசன் 10 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் மற்றும் எம்.டி.

(10ஆம் பக்கம் பார்க்க)



சிறந்த களத்தடுப்பாளரும் ஆட்டநாயகனுமான ஜெ.செந்தூரன்




சிறந்த ஆட்டக்காரர் சி.மிலாண்டோ ஜெனிபர்



சிறந்த பந்துவீச்சாளர் எம்.சஜீந்திரன்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்
**அரியரத்தினம் பிரபாகரன்**

மலர்வு
11★07★1950

உதிர்வு
10★02★2008

*குடும்பத்தின் ஒளி விளக்காய் பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்மை எல்லாம் வழி நடத்தி
வாழ வைத்த அன்புத் தெய்வமே எம் ஜீவன் உள்ளவரை
அழியாது உங்கள் நினைவு.*

10.02.2008 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.03.2008) திங்கட் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். நாளை (11.03.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

விமான நிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி. **குடும்பத்தினர்.** (71833)


துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)



அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

966 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம்

22 39 42 45

07-03-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5554685 - 5570149

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 335,202 | 10/- | 3,352,020/- |
| 2 இலக்கங்கள் | 30,814 | 20/- | 616,280/- |
| 1 இல. + லக்கினம் | 30,485 | 30/- | 914,550/- |
| 2 இல. + லக்கினம் | 2,791 | 100/- | 279,100/- |
| 3 இலக்கங்கள் | 825 | 500/- | 412,500/- |
| 3 இல. + லக்கினம் | 72 | 5,000/- | 360,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,234,450/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 400,198 | | 8,257,950/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இலக்கம் 4674171 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 மார்ச் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 5565530-8-40 |
| அனுராதபுரம் | 5560043-2-09 |
| பதுளை | 5562326-0-80 |
| காலி | 5568228-7-62 |
| திருகோணமலை | 5562598-9-52 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்10

வட்டுக்கோட்டை, சங்கரத்தை பிட்டியம் பதி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர ஆலயப் பெருந்திருவிழா நாளை செவ் வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடை பெற வுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

பருத்தித்துறை,மார்ச்10

தென்.புலோலி சின்னத்தாய் ஆலயத் தில் கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் கந்த புராணப் படிப்பு இடம் பெற்று வருகின்றது.

இம் மாதம் 26 ஆம் திகதி திருக்கல் யாணப் படிப்பு இடம்பெறும். 27 ஆம் திகதி அன்னதானமும் 28 ஆம் திகதி வைர வர் மடையும் இடம்பெறவுள்ளது. (202-218)

* * *

புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றது. பங்குத்தந்தை அருட் திரு.எக்ஸ் றொக்னோ அடிகளார் திருவிழாக் களை நடத்திவருகிறார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி திருச் சொரூ பச் சுற்றுப் பிரகாரம் நடைபெறும். மறுநாள் திருநாள் திருப்பலியுடன் திருவிழா பூர்த் தியடையும். (202-218)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்10

சுன்னாகம், தாளையடி ஐயனார் ஆல யப் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடி யேற் றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள் கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்த்திருவிழா வும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (203)

* * *

கச்சேரி நல்லூர் வீதி, பாணான்குளம் நாச்சி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்10

இணுவில் சிவகாமி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.45 மணிக்குக் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடை பெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்த்திருவிழா வும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (203)

* * *

சுழிபுரம்,மார்ச்10

பண்ணாகம் விசவத்தனை முருக மூர்த்தி ஆலயப் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-28)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்10

சாவகச்சேரி, நுணாவில் மத்தி கந்த சுவாமி ஆலயப் பெருந்திருவிழா எதிர் வரும் வியாழக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள் கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழா வும் இடம்பெறும். (203)

* * *

நல்லூர் சட்டநாதர் ஆலயப் பெருந்திரு விழா நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழா வும் இடம்பெறும். (203)


Mobile நடமாடும் Service சேவை

PC REPAIRS Mobile Service

உங்கள்அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வந்து உங்கள் கணனிகளை உடன் திருத்தித் தரப்படும்
அழையுங்கள்

MICRO PC SYSTEMS

யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி கொடிகாமம் வீதி 0773039536


## இணுவில் சிவகாமி அம்மன் கோயில்
### மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2008

அம்பிகை அடியார்களே!

நிகழும் ஸ்வத்திஸ்ரீ மங்களகரமான சர்வசித்து வருடம் மாசி மாதம் 27ஆம் நாள் (10.03.2008) திங்கட்கிழமை முற்பகல் 9.45 மணி முதல் 10.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் அம்பிகைக்கு துவஜாரோகணம் (கொடி யேற்றம்) நிகழத் திருவருள் கைகூடியுள்ளது. அன்று முதல் பன்னிரண்டு தினங்கள் உற்சவம் நடைபெறும். அடியார்கள் ஆசாரசீலர்களாய் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பிகையின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

10.03.2008 - திங்கள் - **கொடியேற்றம்** - காலை 9.45 மணி முதல் 10.15 மணி வரை
15.03.2008 - சனி - **மஞ்சம்** - மாலை - 6.30 மணி
17.03.2008 - திங்கள் - **கைலாச வாகனம்** - மாலை - 6.30 மணி
18.03.2008 - செவ்வாய் - **குதிரை வாகனம்** - மாலை - 6.30
19.03.2008 - புதன் - **சப்பரம்** - மாலை 6.30 மணி
20.03.2008 - வியாழன் - **தேர்** [காலை 9 மணி] - வசந்தமண்டப பூஜை காலை 7 மணி
21.03.2008 - வெள்ளி - **தீர்த்தம்** [காலை 9 மணி] - வசந்தமண்டப பூஜை காலை 8 மணி
22.03.2008 - சனி - **பூங்காவனம்** - மாலை 4 மணி

மஹோற்சவ பிரதம குரு
"வேத சிவாகம கிரியாரத்தினம்"
**சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்**
*(ஆலயப் பிரதம குரு)*

இணுவில். மு.சிவலிங்கம் *(ஆதீனகர்த்தா)* (சி/551764)


March மாதத்திற்கான புதிய கொம்ப்யூட்டர் டிப்ளோமா பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

Direct Start

Registered with Ministry of Tertiary & Vocational Education

Diploma in Computerized Accounting

Quick Books Premier -2004
QuickBooks

Duration :3 months

Computer Education for Success

DMO Diploma in MS Office XP
DWD Diploma in Web Design
DTP Diploma in Desktop Publishing
DCS Diploma in Computer Studies
DCP Diploma in Computer Programming

ASIAN COMPUTER SYSTEMS

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
Tel:- 021-222 5677

கொடிகாமம் வீதி நெல்லியடி
Tel:- 077-3122198


## கண்ணீர் அஞ்சலி



எயிட்லைன்ஸ் மருத்துவ ஆய்வுகூடத்தில் கடமையாற்றிய

**சு.நடராஜா (MLT)**

அவர்கள் சிவபதமெய்தியமை குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மாசாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**க.சிவானந்தம் (R/MLT)**
**துர்க்கா ஆய்வுகூட சேவை,**
*கோண்டாவில்/கொக்குவில்/ மல்லாகம்.*
**வி.சறோஜினி** *(உதவியாளர்).*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அவனியில் 11 ★ 08 ★ 1942



அங்கியில் 09 ★ 02 ★ 2008

**திருமதி சிவமணி தெய்வேந்திரம்**

*கடந்த 09.02.2008 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.03.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்த னையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

நாகம்மாள் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். **குடும்பத்தினர்.** (71622)

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கைக்குக் கிட்டி வரும் சர்வதேச நற்சான்றிதழ்

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிகமிக மோசமாக இடம்பெற்று வருவதை ஒட்டி சர்வதேச ரீதியாக எழுந்திருக்கும் கடும் விசனமும் எரிச்சலும் சீற்றமுமே இன்று மஹிந்தரின் அரசு எதிர்கொள்ளும் விஸ்வரூபப் பிரச்சினைகளாகியிருக்கின்றன.

யுத்த களத்தில் புலிகளை எதிர்கொள்வதற்கான தந்திரோபாயம் அல்லது யுக்தி என்ற பெயரில் மஹிந்தரின் அரசு வகுத்திருக்கும் செயற்பாடுகளின் திட்டம் நாட்டில் பெரும் மனித உரிமை மீறல் விவகாரமாகி விட்டிருக்கின்றது.

'புலிப் பயங்கரவாதத்தைப் பதில் பயங்கரவாதத்தால் வெற்றி கொள்ளுதல்' - என்ற மஹிந்தர் அரசின் இரகசியக் கோட்பாட்டுத்திட்டம் அல்லது மறைமுகக் கொள்கைப் பின் பற்றல் போக்கு 'பூமராங்' ஆக - சர்வதேசப் பாய்ச்சலாக - அந்த அரசின் மீதே திரும்பியிருக்கின்றது.

உலகில் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் சர்வதேச அமைப்புகள் எல்லாம் ஒரே குரலில் கொழும்பு அரசுக்கு எதிராகக் கிளர்ந்து நிற்பதே இன்றைய அரசியல் நிலைவரமாகின்றது.

*இலங்கையில் இடம்பெறும் மோசமான ஆள்கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல் போன்ற பயங்கரங் களுக்கு இலங்கை அரசே பொறுப்பு என்று அமெரிக்காவைத் தளமாகக்கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த வாரமும் பகிரங்க அறிக்கை மூலம் இலங்கை அரசின் கொடூரப் போக்கைத் தோலுரித்துக் காட்டியிருக்கின்றது.*

*முக்கிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையைக் கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்ட சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட குழு, விசாரணைகள் என்ற பெயரில் நடக்கும் கண்துடைப்பு நாடகத்தை - பம்மாத்து நடவடிக்கையை - பகிரங்க அறிக்கை மூலம் அம்பலப்படுத்திவிட்டுத் தனது பணியிலிருந்து வெளியேறுவதாகப் பிரகடனப்படுத்தி விட்டது.*

*இலங்கை அரசு மனித உரிமை மீறல்களில் மோசமாக ஈடுபட்டு வருகின்றது என்பதை ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் தொடர்ந்து அம்பலப்படுத்திவருகின்றது.*

*மனித உரிமைகளைப் பேணுவதில் இலங்கை அரசின் மெத்தனப் போக்கை ஆசிய மனித உரிமைகள் மூலவள நிலையமும் வெளிப்படுத்தி வருகின்றது.*

*மனித உரிமைகளை நிலைநிறுத்துவதில் இலங்கை அரசு பெரும் குற்றம் இழைத்து வருவதை சர்வதேச மன்னிப்புச் சபையும் உலகுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது.*

*அண்மைக்காலத்தில் உலகில் பலவந்தமாகக் கடத்திக் காணாமற் செய்யப்படுவோரின் எண்ணிக்கை இலங்கையில்தான் அதிகம் என்பதை பலவந்தமாகக் கடத்தி ஆள்களைக் காணாமற்போகச்செய்தல் தொடர்பான விடயங்களை ஆராயும் ஐ.நா. செயலணி அண்மையில் புள்ளிவிவர அடிப்படையில் தெளிவுபடுத்தியிருந்தது.*

*இலங்கையில் நிலைமை மோசமடைந்து வருவதை தற்போது ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடரில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரான லூயிஸ் ஆபர் அம்மையாரும் தாம் சமர்ப்பித்த அறிக்கையில் புட்டுவைத்துள்ளார்.*

*இதே கூட்டத் தொடருக்கு, சித்திரவதை, கொடூர - மனிதாபிமானமற்ற - அவமானப் படுத்துகின்ற - நடத்துகைமுற்றும் தண்டனைகள் தொடர்பான ஐ.நா. அறிக்கையாளர் மன்பிரட் நொவாக் சமர்ப்பித்த அறிக்கையிலும் இலங்கையில் சித்திரவதைகள் பரந்தளவில் இடம்பெறுகின்றன என்பது தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*சர்வதேச ஜூரர்கள் சபையும் இலங்கையின் மனித உரிமைகள் பேணும் சீத்துவத்தை இப்போது வெளிவெளியாக அம்பலப்படுத்தி நிற்கின்றது.*

*நெருக்கடிகளுக்கான சர்வதேசக் குழுவும் இலங்கையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவதைச் சுட்டிக்காட்டி, அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பு என்ற பெயரில் அதில் சர்வதேசம் தலையிடுவதையும் ஐ.நாவின் சுயாதீனக் கண்காணிப்பு அமைப்பு ஒன்று இங்கு நிறுவப்படுவது மிக அவசரமும் அவசியமும் என்பதையும் வெளிப்படுத்தியிருக்கின்றது.*

- இவ்வாறு மனித உரிமைகள் நிலைவரம் இலங்கையில் சீர்கெட்டு வருவதைச் சுட்டிக்காட்டி, அபாய எச்சரிக்கை மணி அடித்து, குரல் எழுப்பி வரும் சாவதேச அமைப்புகளைப் பட்டியலிட்டால் அது தொடர்ந்து நீண்டு கொண்டு செல்வதாகவே இருக்கும்.

ஆனால் இவ்வாறு சர்வதேச மட்டத்தில் நிலைமை மோசமடைந்து வருவதைத் தென்னிலங்கை அரசுத் தலைமை புரிந்துகொண்டதாகவோ அல்லது அதனை ஒட்டிக் கரிசனை காட்டுவதாகவோ அல்லது அலட்டிக் கொள்வதாகவோ தெரியவில்லை.

அரசுத் தலைமையின் இராணுவச் சிந்தனைப் போக்குக்கு அமையஆட்சிக் கட்டமைப்பின் - ஆட்சி முறைமையின் - சில்லுச் சுற்றத் தொடங்கிவிட்டது.

அதை நேர்வழிப்படுத்தும் சிந்தனை அரசுத் தலைமைக்கு ஏற்படாதவரை மனித உரிமைகளை மிதித்துக் கொடூர ஆட்சி புரியும் அதிகாரச் சேற்றிலிருந்து அது மீளப் போவதேயில்லை.

ஆனாலும், அந்த வினைக்கான விளைவை அது அறுத்துத்தானாக வேண்டியிருக்கும். அது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாகும்.

# சிவநேசனுக்கு அஞ்சலி செலுத்த பிரபா வருவாரா என்பதில் புலனாய்வு தரப்பினருக்கு ஏற்பட்டிருந்த பலத்த சந்தேகம்

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நாடாளுமன்ற உறுப்பினர் (ரி.என்.ஏ) கே. சிவநேசன் கொலை செய்யப்பட்டதையடுத்து அரசபுலனாய்வு முகவர்களின் கவனம் எல் லாம் முல்லைத்தீவு மாவட் டத்திலுள்ள மல்லாவி கிராமத்தின் பக்கமே திரும் பியிருந்தன.

மல்லாவியில் அவரது இல்லத்தில் நடைபெற்ற இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் வருகை தருவாரா என்பதைக் கண்டறியவே அவர்கள் அக்கறை கொண்டிருந்தனர்.

4 ஆவது ஈழப்போர் துரிதமடைந்திருக் கும் வேளையில் இந்தப் புலனாய்வாளர்கள் காட்டும் அக்கறை நியாயமானதே. தலைவர் பிரபாகரனின் உடல் நிலையைப் பற்றி வெளிவந்துள்ள பல்வேறு செய்திகள் இதில் அதிக அக்கறை செலுத்தும்படி செய்துள்ளன. விமானப்படைத் தாக்குதலில் அவர் காயமடைந்து விட்டார், அவருடைய கால் ஒன்று கழற்றப்பட்டுவிட்டது என்ற வாறெல்லாம் செய்திகள் பரவியிருந்தன. ஆனால் இந்தச் செய்திகள் எதுவும் உறுதிப் படுத்தப்படவில்லை.

களைக் கட் டுப்படுத்துவதற் காகவே நடவடிக்கை எடுக்கப்பட்டி ருந்தது.

**புலிகள் குற்றச்சாட்டு படையினர் மறுப்பு**

சிவநேசன் எம்.பியின் கொலைக்கு இராணுவத்தின் ஆழ ஊடுருவித்தாக்கும் படையணிகளே காரணம் எனப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆனால் இதனை இராணுவத்தினர் பலமாக மறுத்துள்ளனர். இம்மாதிரி நிலைமைகள், செயற்பாடுகள் பற்றிய தகவல்களை வெளியிடுவது அல் லது மறுப்பது இராணுவத்தரப்பின் வழமை யல்ல. இந்த விடயத்தில் மறுப்பு உடனடியாக வெளிவந்தது. இராணுவம் சிவிலியன் இலக்குகளின் மீது தாக்குதல் நடத்துவதில்லையென்பதைக் காட்டுவதற்காக இவ் வாறு மறுக்கப்பட்டதாம்.

இந்த வருடம் முதல் மூன்று மாதங்களுக்குள் கொல்லப்பட்ட மூன்றாவது நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் ஆவார். ஏனையவர்கள் மகேஸ்வரன் மற்றவர் தேசி யக் கட்டுமானத்துறை அமைச்சர் டி.எம். திஸநாயக்க ஆவார்.

சிவநேசன் புலிகளின் வலுவான ஆதர வாளர் என்று கூறப்படுகின்றது. யாழ்ப் பாண நாடாளுமன்ற உறுப்பின

## சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் பிரபல கள ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து....

இருந்தாலும் அவருக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுஅதனால் உருவான ஆரோக்கிய சிக்கல்களினால் அவர் நோய் வாய்ப்பட் டிருப்பதாகப் புலனாய்வாளர்களில்ஒரு பகுதியினர் நம்பினார்கள். சில வெளி நாட்டு டாக்டர்கள் சட்டவிரோதமாக நாட் டுக்குள் வந்து அவருக்கு சிகிச்சையளிப் பதாக வெளிவந்த வதந்திகள் இந்தச் செய்திகளை மேலும்வலுவாக்கியிருந்தன.

மாமனிதர் சிவநேசனின் உடலுக்கு புலி களின் தலைவர் பிரபாகரன் மாலையணிவித்து அஞ்சலி செலுத்திய புகைப்படம் நேற்று (ஞாயிறு) பத்திரிகைகளால் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வதந்திகள் எதுவாக இருந்தாலும் வன்னியில் நிலை கொண்டுள்ள அல்லது அடிக்கடி அங்குபோய் வரும் சர்வதேச அமைப்பு கள் வேறுவிதமான செய்திகளை வெளியிட்டிருந்தன. அப்படியான இருவரை நான் அண்மையில் சந்தித்தேன். அவர்கள் பெயர்களை வெளியிட விரும்பவில்லை.ஒருவர் கூறினார் இந்தச் செய்திகள் எதிலும் உண்மையும் இல்லை என்று. மற்றவர் சொன்னார் அவர் விமானத் தாக்குதல் ஒன்றிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார் என்றும் இன்னமும் அவரே தமது அமைப்பை முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்றும் அறிந்தார் என்று.

உருப்படியான, சரியான தகவல் கிடைக்காத அளவில் எது சரியான செய்தி என்று சொல்ல முடியாமலிருக்கிறது. இம்மாதிரி விடயங்களில் புலிகள் தரப்பில் எதுவிதத் தகவலும் வெளியிடாமல் இருப்பது அவர் களின் வழக்கம். 2004 டிசெம்பர் மாதம் சுனாமி தாக்குதலின் போதும்கூட பிரபா கரன் இறந்து விட்டதாகச் செய்திகள் வெளியிடப்பட்டன.பின்னர்பிரபாகரன்வெளிப்பட்டார். உடனே வேறு ஒரு சர்ச்சை கிளப்பி விடப்பட்டது. இது பிரபா கரன் அல்ல. மூக்கு அல்லது காது வித்தியாசமாக உள்ளது. வேறு ஒருவர் பிரபாகரனாக வெளிக்காட்டுகின்றார் என்றெல்லாம் கூறப்பட்டது.

ராக எஸ்.பி. தமிழ்ச்செல்வன் அவரைச் சிபார்சு செய்திருந்தார் எனக் கூறப்படுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை சிவநேசனுக்கு மாமனிதர் பட்டமளித்து கௌரவித்துள்ளார் பிரபாகரன்.

**தெற்குக் கிராமங்களில் பீதி நிலவுகின்றது**

தெற்கில் இடம்பெற்றுவந்துள்ள தொடர்ச்சியான தாக்குதல்கள், புத்தலப்

## மதவாச்சி தடைமுகாமில் முச்சக்கரவண்டியில் பிடிபட்ட தொலைநோக்குக் கருவிகளும் இதர பொருள்களும்

பகுதி கிரா மங்களில் மக்கள் மத்தியில் பெரும் பீதியைத் தோற்றுவித்துள்ளது. முன்னைய தேடுதல்களில் பெரிய அளவில் பயன் ஏற் படாத நிலையில் அப்பகுதியில் பெரும் எடுப்பில் தேடுதல்களை இராணுவத்தினர் ஆரம்பிக்கும் சாத்தியம் இருப்பதாகக் கரு தப்படுகின்றது. தெற்கில் ஆழஊடுருவுவதன் மூலம் அப்பகுதியில் நிர்வாகச் சீர்குலைவுகளை ஏற்படுத்துவதைப் புலிகள் கருத்தில் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. இதேவிதமாக ஏனைய இடங்களிலும் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் அப்பகுதிகளில் மேலும் அதிக இராணுவத்தையும் பொலிஸாரையும் பணிக்கு அமர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படும். இராணுவத் தரப்பால் அதிக வளங்களைப் பயன்படுத்தவும் செல வுகளை அதிகரிக்கவும் இது ஏதுவாகும்.

**கொழும்பில் புலிகளின் மூன்று மறைவிடங்கள்**

கொழும்பிலும் அதன் அருகிலுள்ள பகுதிகளிலும் குறைந்தது புலிகளின் மூன்று மறைவிடங்களைப் பொலிஸார் கண்டுபிடித்தமையானது அவர்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு பொலிஸ் பகுதிகளிலும் 40 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் குற்றவியல் புலனாய்வுப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து புலிகள் எவ்வாறான தாக்குதல்களை நடத் தத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தள்ளது. சமயவாதிகள்போல் வேடமிட்ட குழுவினர் வெடிபொருள்களையும் குண்டுகளையும் கண்டி, நுவரெலியா உட்பட பல இடங்களில் வழங்கியுள்ளன. இன்னொரு குழு முக்கிய பிரமுகர்களை இலக்குவைப்பதற்கான இரகசியத் தகவல்களைப் பெறுவதற்குப் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புகளைஏற்படுத்திக்கொண்டுள்ளது.

இவர்களிடமிருந்து கிடைத்துள்ள தகவல்கள் வடக்கிலிருந்து கொழும்பின் பெரும் பகுதிகளுக்கு வெடிபொருள்கள் போய்ச்சேருவதைத் தடுக்க உதவியுள்ளன. அப்பகுதிகளிலிருந்து வரும் வாகனங்கள் நேரடியாகக் கொழும்புக்குச் செல்வது தடுக்கப்பட்டுள்ளது. அப்படித் தடுக்கப்படும் முக்கிய இடங்களில் ஒன்று மதவாச்சியாகும். மதவாச்சியில் இவ்வாறு தடுக்கப்பட்ட மூன்று சக்கர வாகனமொன்றில் மூன்று பார்சல்களைப் பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர். அவைகளில் ஆறு டிஜிற் றல் தொலைநோக்கிகள் இருக்கக் காணப்பட்டுள்ளன. வீடியோப் படங்களை எடுக்கும் சாதனங்கள் இவைகளில் உண்டு. 5 தொலைநோக்கிகள், சினைப்பர் இலக்கு கார்டுகளைக் கொண்டதாக இருந்துள்ளன. லேசர் டோர்ச்சுகள், 12 ஆயிரம் பெர்குசன் தொப்பிகள் மற்றும் பற்றறிகள், பற்றறிச் சார்ஜர்களும் இருந்துள்ளன. மூன்று நபர்கள் - நவுஸா மொகமட் றியாஸ்(22), மொகமட் ஷாரிப் பலீல்(31), பரூக் மொகமட் பார்ஷான் (26) ஆகியோர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நான்காவது நபர் தப்பி ஓடியுள்ளார். அவருடைய பெயர் வெளியிடப்படவில்லை. அவரது வீட்டை பொலிஸார் சோதனையிட்டு செய்மதி போன்ற ஒன்றையும் வோக்கிடோக்கி ஒன்றையும் கைப்பற்றி யுள்ளனர். அநுராதபுரத்தில் சனியன்று கிளைமோர் குண்டு ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

கொழும்பில்மூன்று புலிமறைவிடங்களைக் கண்டுபிடித்தால் புலிகளின் மறைவிடங்கள் அனைத்தும் பிடிபட்டுவிட்டதாகக் கொள்ளமுடியாது என்கிறார்கள் பொலிஸார். இந்த மறைவிடங்களிலிருந்து அவர்கள் சுயேச்சசையாக செயற்படுகிறார்கள். ஓர்இடத்திலுள்ளவர்களுக்கு இன்னோர் இடத்திலுள்ளவர்கள் நடவடிக்கைகள் தெரியாமலிருக்கலாம்.

## மன்னார் களமுனையில் இராணுவம் மெதுவாக முன்னேறுகிறது

கடந்த சில வாரங்களில் வன்னியில் சில பகுதிகளுக்கு எவரும் போகக்கூடாதென்று புலிகள் தடைவிதித்திருந்தனர். சர்வதேச நிறுவனத்துக்கும் இந்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இராணுவத்தின் ஆழ ஊடுருவித்தாக்கும் அணியினரின் செயற் பாடு

**வன்னியில்தான் முக்கிய கவனம்**

தெற்கில் சீர் குலைவுகளையோ கொழும் பில் தாக்குதல் சம்பவங்களையோ நிகழ்த்து வதோடு மிக முக்கியமான காரியங்களைக் கவனிக்கவேண்டிய நிலைமை புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது. தங்களின் வலுவான கோட் டைப் பகுதிக்குள் இராணுவம் ஊடுருவி நிலைகொள்வதைத் தடுப்பதே அதுவாகும்.

**மெதுவாக முன்னேற்றம்**

மன்னார்க் களமுனையில் கடந்த வருடம் ஜூலை 2 ஆம் திகதி இராணுவம் நடவடிக் கையை ஆரம்பித்தது. அது தொடர்கிறது. இராணுவம் தனது நோக்கத்தை நிறைவேற்ற முடியாமலிருக்கிறது. புனித மடுப் பகுதியையும் விடத்தல்தீவிலுள்ள புலிக ளின் நிலைகளையும் கைப்பற்றுவது இராணுவத்தின் நோக்கம். முன்னேறிவருகிறார்கள். மடுவிலிருந்து இன்னமும் இரண்டு வார கால தூரத்திலேயே தாங்கள் இருப்பதாகக் கூறிக் கொண்டார்கள். அவர்களின் காலக் கெடு முடிவடைந்துவிட்டது. என்றாலும் கடந்த வியாழக்கிழமை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளார்கள்.

பரப்பாங்கண்டலை உள்ளடக்கிய 1.5 கிலோமீற்றர் பரப்பளவு பகுதியைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்கள். மன்னார் பகுதியிலிருந்து வன்னிக்குப் போகும் வாயில் பகுதியான இது உயிலங் குளத்துக்கு அருகாமையிலுள்ளது.

பூதவராயன் குளத்துக்கு மேற்குப் புறமாக முன்னேறும் படையினர் இதை சாதித்துள்ளார்கள். கிழக்குப் புறமாக முன்னேறிய படையினர் கெரில்லாக்களின் காவல் அரண்களை அழித்துக் கொண்டு குளத்தின் மேற்குக் கரையை அடைந்துள்ளார்கள்.

வன்னியில் - மன்னார், வெலிஓயா மற்றும் முகமாலை ஆகிய களமுனைகளில் நடக்கும் மோதல் இப்போதைய சண்டையில் ஒருதீர்க்கமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. மெதுவாக நடந்தாலும் இராணுவம் சண்டையிட்டபடி முன்னேறுகிறது. இப் பகுதிகளைத் தக்கவைத்துக்கொள்ள புலி கள் பெரு முயற்சி எடுத்து வருகின்றார்கள் என்பது தெளிவு. இந்த நிலையில் இப்போதைய போரானது அதன் உச்சக்கட்டத்தை இனிமேல்தான் அடைந்தாக வேண்டும். (ப)

## நாளை

| | |
|---|---|
| மாசி - 28 | 11.03.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: சதுர்த்தி | பி.ப. 04.00 வரை |
| நட்சத்திரம் : | அச்சுவினி |
| பி.ப. 12.43 வரை | |
| சுபநேரம் : | 10.52 - 12.22 |
| ராகுகாலம் : | 03.22 - 04.52 |



# காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில்
## ஈழத்துச் சிதம்பரம்
### வருடாந்த பங்குனி மகோற்சவம் - 2008

சிவநேயர்களே!

நிகழும் சர்வசித்து வருடம் மாசி மாதம் 29ஆம் திகதி (12.03.2008) புதன்கிழமை வருடாந்த பங்குனி மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் சிறப்பாக நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் யாவரும் பெருந்திரளாக வந்து மகோற்சவத்தினைக் கண்டு எம் பெருமானை வணங்கி இஷ்ட சித்திகளைப் பெற்றேகுக.

**மகோற்சவ கிரியை விவரம்:**

| | |
|---|---|
| 12.03.2008 புதன்கிழமை | முற்பகல் 10 மணிக்கு -கொடியேற்றம் |
| 15.03.2008 சனிக்கிழமை | இரவு 7 மணிக்கு -கைலாச வாகனத் திருவிழா |
| 18.03.2008 செவ்வாய்க்கிழமை | இரவு 7 மணிக்கு -வேட்டைத் திருவிழா |
| 19.03.2008 புதன்கிழமை | இரவு 7 மணிக்கு -சப்பரம் |
| 20.03.2008 வியாழக்கிழமை | பஞ்சரத பவனி. காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 8 மணிளவில் சோமஸ்கந்தர் பரிவாரமூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளிப் பஞ்சரத பவனி இடம்பெறும். |
| 21.03.2008 வெள்ளிக்கிழமை | காலை 6 மணிக்கு நடேசர் உற்சவம். முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவம். இரவு 7 மணிக்கு கொடியிறக்கம். |
| 22.03.2008 சனிக்கிழமை | மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் |

(சி/551769)

*குறிப்பு:* தினமும் காலைத்திருவிழா காலை 8 மணிக்கும் மாலைத்திருவிழா மாலை 5 மணிக்கும் ஆரம்பமாகும். 10.03.2008 திங்கட்கிழமை பத்திரகாளி பொங்கல்.

ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்.
**ஆ.அம்பலவிமுருகன், ம.சுந்தரலிங்கம்,**
**ஆதீனகர்த்தாக்கள்.**

## கூட்டங்கள்

கரங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத் தலைவர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (203)

* * *

உயரப்புலம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளன. வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (203-135)

## ஆசார்யாபிஷேக விஞ்ஞாபனம்

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சர்வஜித்து வருடம் மாசித் திங்கள் 27ஆம் நாள் (10.03.2008) திங்கட்கிழமை (இன்று) ரேவதி நட்சத்திரமும் திருதியை திதியும் சித்தயோகமும் கூடிய முற்பகல் 10 மணி 11 நிமிடம் முதல் 10 மணி 55 நிமிடம் வரையுள்ள இடப லக்ன சுபமுகூர்த்த வேளையில்

பிரம்மஸ்ரீ சதாசிவக் குருக்களின் பௌத்திரனும் பிரம்மஸ்ரீ முத்துக்குமார சர்மாவின் புத்திரனுமாகிய

**பிரம்மஸ்ரீ வைகுந்தவாச சர்மா** அவர்களுக்கு

"விஷேட தீட்சா, நிர்வாண தீட்சா ஆசார்யபிஷேகம்" திருவருள்மிகு ஸ்ரீ நீலாயதாட்சிசமேத காயாரோஹண ஸ்வாமியின் அனுக்கிரகத்துடன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும்.

காயாரோஹண தேவஸ்தானம், திருநெல்வேலி.
பிரம்மஸ்ரீ **சதாசிவக்குருக்கள் குடும்பத்தினர்.**
(71847)

## KODAK EXPRESS
### கொண்டாட்டம்

இன்று முதல்
* 4 R, * CD Cover, * 8x24 * 10x30, * 12x36
போன்றவற்றை ஒரே தடவையில் பெருமளவு பிரதியாக்கம் செய்வோருக்கு அதிரடி விலைக்கழிவுகள்.

**MOORTHY, LAZER DIGITAL COLOUR LAB**
**62/17, Stanley Road, Jaffna.** (71804)

## விற்பனைக்கு

D.குளிர்சாதனப் பெட்டி, Air Condition, Lumala Bike போன்றவை உடன் விற்பனைக்கு.
தொடர்பு: **வேலன் விலாஸ்,**
766, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (71853)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஒரு பிறவுன் கலர் நிறமுடைய ரவலிங்பாக் ஒன்று 08.03.2008 அன்று நெல்லிப்பழை பஸ் ஏறும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். **அத்தல் முனான் ரமேஷ்.**
[illegible] வீதி,
[illegible], யாழ்ப்பாணம். (71853) T.P. 0773569991

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 . 10 . 1950
உதிர்வு 20 . 02 . 2007



### அமரர் நாகலிங்கம் இராசேந்திரம்

ஆண்டு ஒன்று அல்ல
ஆயிரம் கடந்தாலும்- உங்கள்
அன்பு முகமும் ஆசைக் கதையும்
அழியாமல் எம்முடன் வாழும்.

பாடசாலை வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
**குடும்பத்தினர்.** (71851)

## ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்த உள்ள சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்
### ஒருவருடப் பயிற்சி முகாம்

**தகைமைகள்:**

வயது: 20-28 வரை
கல்வித் தகைமை: க.பொ.த.சாதாரண தரம் -
இந்து சமயம் - A
ஆங்கிலம் - C
தமிழ் - A

(சி/551782)

கல்விகற்ற பாடசாலை/கல்லூரியின் பெயர் (அந்தக் கல்லூரியின் அதிபரின் தகைமைச் சான்றிதழ் மிகமிக அவசியம்)
க.பொ.த.உயர்தரம்:
இந்து நாகரிகம் - A

பல்கலைக்கழகப் படிப்பு பெறுபேறுகள் சான்றிதழ், நற்சான்றிதழ் 2 இணைக் கப்படல் அவசியம். விண்ணப்பத்தாரரைப் பற்றி அறிய வேண்டிய 2 பெயர்கள், முகவரி, அவர்களது பதவிகள் குறித்துத் தருக.

விவாகமாகாதவராக இருத்தல் அவசியம்.

பால்: ஆண், பெண்.

பொதுப்பணிகளில் ஈடுபட்டிருந்தால் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும். எழுத்துப் பரீட்சை அவசியம் எனக்கண்டால் அது முதலில் நடைபெறும். கட்டணம் ரூபா 1000 அறவிடப்படும். ஒருவருடம் முகாமில் இருந்து வெளியேறும் பொழுது இக்கட்டணம் திருப்பி அளிக்கப்படும். தேர்ந்து எடுத்தவர்களுக்கு வசதி வரும் பொழுது சமூகப்பணியில் ஈடுபட வேண்டிவரும். இப்பயிற்சி முகாம் முழுக்க முழுக்க சுவாமி விவேகானந்தரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கமாக நடைபெறும். பயிற்சி முகாமில் இடையில் நின்றால் கட்டணம் திருப்பி அளிக்கப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் 30.03.2008இற்கு முன்பு **செயலாளர், ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமம், தருத்தித்துறை.** என்று விலாசமிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் அவசியம். விண்ணப்பப்படிவம் பெறவிரும்புபவர் ரூபா 50இற்குரிய முத்திரை அனுப்பிப் பெறுக் கொள்ளவும்.

## சென்.பற்றிக்ஸ்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சஜீந்திரன், ரி.லவதீசன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி பணிப்பாளர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பரிசில்களை யாழ்ப்பாணக் கல்லூரிப் பணிப்பாளர் நோயல் ஏ.விமலேந்திரன் வழங்கிக் கௌரவித்தார்.

பரிசில் பெற்றோர் விவரம் வருமாறு:-

சிறந்த ஆட்டக்காரர்கள் - சி.மிலாண்டோ ஜெனிபர(சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எம்.ஜே.மனோஜ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

சிறந்த பந்துவீச்சாளர்கள் - எம்.வி.கமில்ரன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி),எம்.சஜீந்திரன்(சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

சிறந்த களத்தடுப்பாளர் - ஜே.செந்தூரன் (யாழ்ப்பாணக் கல்லூரி)

சகலதுறை வீரர் - வி.ஜோய் சிகான் யாழ்ப்பாணக் கல்லூரி)

ஆட்டநாயகன் - ஜெ.செந்தூரன் (யாழ்ப்பாணக் கல்லூரி)

சிறந்த இணைப்பாட்டக்காரர்கள் - எம்.வி.கமில்ரன், எம்.ஜே.மனோஜ்(சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

விசேட பரிசில்கள் - பி.நவநீதன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), பி.சிறிகுகன் ( யாழ்ப்பாணக் கல்லூரி) (1-86-111-302)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### மங்கம் மாணிக்கம்

மண்ணகம்:13.10.1936
விண்ணகம்: 16.02.2002
மாசி பூர்வபட்ச சதுர்த்தி

ஆறு ஆண்டுகள் போனதே!
ஆறாது மாறாது அழுதாலும் தீராதே!
ஆவதும் அழிவதும் அவன் செயல்தானே, என் செய்வோம்
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் அம்மா!
காலமெல்லாம் அழுது, தொழுது, ஆராதனை செய்து
நல்ல பிறவி கிடைக்க வேதவன விநாயகரை
மனதுருகி மன்றாடி வணங்கி நிற்கும்:
அன்புக் **கணவர்,** பாசமிகு **மக்கள்,**
நேச **மருமக்கள்,** ஆசைப் **பேரப்பிள்ளைகள்.**

இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரி. **சி.மாணிக்கம்** (கணவர்). (71799)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் கனகரத்தினம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தாளையடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கனகரத்தினம் 08.03.2008 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் கருணானந்தன், பத்மலோசனி, பத்மலீலா, ஸ்ரீரமணானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சித்திரா (லண்டன்), சாந்தி (கொழும்பு), இரகுநாதன் (கல்வியியற் றுறை, யாழ்.பல்கலைக்கழகம்), அகிலன் (கனடா), கலாவதி (கனடா) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான தாமலிங்கம், சோமசுந்தரம், சண்முகராஜா மற்றும் சுப்பிரமணியம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், முத்துலிங்கம், இராசமணி மற்றும் இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் சுரேஷ்குமார், இந்துஷா, தனுஷா, அபிலாஷா, ஜனகன், உமையவன், பிரசான், பிரவீந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

17/8, பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.
தகவல்:
க.கருணானந்தன் (மகன்). (சி/551778)

## துல்லியமான....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணித்தலைவர் கே.நிரோஜன் 19 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 46 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளையும் அணியின் உப தலைவர் ஜே. ரஜீவன் 8.4 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

ஆட்டம் முடிவடைந்த பின்னர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் க. சிவாஜி தலைமையில் பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது.

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் பி. விக்னேஸ்வரன் வீரர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

பரிசில் பெற்றோர் விவரம் வருமாறு:-

* சிறந்த களத் தடுப்பாளர் - ப. தயாளன் (மகாஜன)

* சிறந்த துடுப்பாட்டக்காரர் -எ. ஜெலன்ஸ் (ஸ்கந்தா)

* சிறந்த பந்து வீச்சாளர் - க. நிரோஜன் (ஸ்கந்தா அணித் தலைவர்)

* சகல துறை ஆட்டக்காரர்கள் - யோ. ரஜீவன் (ஸ்கந்தா உப தலைவர்)

* ஆட்டநாயகன் -க. நிரோஜன் (ஸ்கந்தா அணித் தலைவர்) (1-68)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 10 . 09 . 1940
உதிர்வு 09 . 02 . 2008



### திருமதி கந்தப்பு செல்லம்மா

இன்று (10.03.2008) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் எமதில்லத்தில் நடைபெற உள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாமியன் அரசடி,
கரவெட்டி. (சி/551777) **குடும்பத்தினர்.**

# மில்ஸின் மிரட்டலில் இங்கிலாந்து சரண்
# 189 ஓட்டங்களால் நியூஸிலாந்து வெற்றி


வெற்றிக்கு வித்திட்ட கைல் மில்ஸ்

ஹமில்ரன், மார்ச் 10

ஹமில்ரனில் இடம்பெறுவந்த இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி 189 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தில் 300 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி கைல் மில்ஸின் வேகத்தில் மிரண்டு 110 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அபாரமாகப் பந்துவீசிய மில்ஸ் வெறும் 16 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஆரம்ப நான்கு விக்கெட்டுகளையும் கைப்பற்றி வெற்றிக்கு வித்திட்டார்.

நியூஸிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி மூன்று டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடுகிறது. ஹமில்ரனில் முதல் டெஸ்ட் கடந்த புதன்கிழமை முதல் நடைபெற்றுவந்தது. முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து 470 ஓட்டங்கள் எடுத்தது. மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 284 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

### நான்காம் நாள் ஆட்டம்

நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 348 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பின்னர் 122 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடக்கிய நியூஸிலாந்து அணி, சைட்பொற்றமின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாமல் தடுமாறியது. இந்த ஆட்டத்தில் சைட்பொற்றம் 'ஹட்ரிக்' சாதனை படைத்தார். ஒரு கட்டத்தில் 99 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்திருந்த நியூஸிலாந்து, நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற 4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 147 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்திருந்தது. கடைசி 6 விக்கெட்டுகள் வெறும் 20 ஓட்டங்களுக்குள் வீழ்ந்தன.

நேற்றுமுன்தினம் இங்கிலாந்து பந்துவீச்சாளர் சைட்பொற்றம் தொடர்ச்சியாக மூன்று விக்கெட்டுகளைச் சாய்த்து 'ஹட்ரிக்' சாதனை படைத்தார். அவர் வீசிய 30ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் பிளெமிங்(66) ஆட்டமிழந்தார். பின்னர் சைட்பொற்றம் வீசிய 32ஆவது ஓவரின் முதல் பந்தில் சிங்கிளேயரும்(2), அடுத்த பந்திலேயே ஓரமும்(0) ஆட்டமிழக்க அவர் 'ஹட்ரிக்' சாதனை படைத்தார்.

நியூஸிலாந்துக்கு எதிராக சுமார் 77 ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்த்தப்படும் இங்கிலாந்தின் 'ஹட்ரிக்' சாதனை இதுவாகும். 1929-30இல் நியூஸிலாந்துக்கு எதிராக இங்கிலாந்து வீரர் ஆலம் 'ஹட்ரிக்' சாதனை படைத்தார். இங்கிலாந்து சார்பில் 'ஹட்ரிக்' சாதனை நிகழ்த்தும் 11ஆவது வீரரான சைட்பொற்றம், சர்வதேச அளவில் 37ஆவது வீரராகிறார்.

### ஐந்தாம் நாள் ஆட்டம்

147 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகள் இழப்பு என்ற நிலையில் நேற்றைய கடைசி மற்றும் 5ஆம் நாள் ஆட்டத்தை நியூஸிலாந்து ஆரம்பித்தது. மேலும் 30 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் - 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது நியூஸிலாந்து அணி தனது 2ஆம் இன்னிங்ஸை இடைநிறுத்தியது. இதன்படி இங்கிலாந்தின் வெற்றிக்கு 300 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இலக்கைத் துரத்திய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பத்திலேயே வேட்டுவைத்தார் கைல் மில்ஸ். இவரின் வேகத்தில் குக் (13), வோகன் (9), ஸ்ரோரஸ் (2), பீற்றர்ஸன் (6) என அடுத்தடுத்து ஆரம்ப வரிசை வீரர்கள் வெளியேறினர். அடுத்துவந்த இயன் பெல் மாத்திரம் சளைக்காமல் போராடினார். எனினும், மறுமுனையில் வந்த வீரர்கள் எவரும் பெல்லுக்கு சரியான ஒத்துழைப்பு வழங்கவில்லை. இறுதியில் இங்கிலாந்து அணி 110 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் தேநீர் இடைவேளையின் சற்றுப் பின்னர் இழந்து தோல்வியைத் தழுவியது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த இயன் பெல் 54 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக கைல் மில்ஸ் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி வெலிங்டனில் ஆரம்பமாகின்றது.

## கங்குலி வேதனை

கொல்கத்தா, மார்ச் 10

மிகச் சிறப்பாக விளையாடி வந்த நிலையிலும் ஒருநாள் போட்டி அணியிலிருந்து நீக்கப்பட்டது வேதனை அளிக்கின்றது என முன்னாள் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

''கடந்த ஆண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்த நிலையிலும் அணியிலிருந்து நீக்கப்பட்டேன். இதனை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த நிலையில் நீக்கப்பட்டமை வேதனை தருகிறது. இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிக்க என்ன தேவை என்று எனக்குத் தெரியவில்லை. ஐ.பி.எல். போட்டிகளில் சிறப்பாக ஆடினால் அணியில் இடம்பெற முடியுமா என்று தெரியவில்லை.'' - இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டி

## சிமித் சதம்; தென்னாபிரிக்கா வெற்றி

சிட்டகொங், மார்ச் 10

அணித்தலைவர் கிரேம் சிமித் சதம் விளாச, பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பதிவுசெய்தது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது. தொடரின் முதல் போட்டி நேற்று சிட்டகொங்கில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அணி சார்பாக ஆரம்ப வீரரான ரமீம் இக்பால் 98 பந்துகளில் 82 ஓட்டங்களை (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) பெற்றுக்கொடுத்தார். மற்றைய வீரர்கள் எவரும் சிறப்பாக ஆடவில்லை. அவர்களில் ஒருவர்கூட 15 ஓட்டங்களுக்கு மேல் பெறவில்லை.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் அன்ட்ரூ நெல் 3 விக்கெட்டுகளையும், லாங்வெல்ற், மோர்கீல் மற்றும் போல் ஹரீஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.


சதம் அடித்த சிமித்

இலகுவான இலக்கைக் கலைத்த தென்னாபிரிக்கா அணிக்கு ஆரம்ப வீரர்களான சிமித் - கிப்ஸ் ஜோடி சிறந்த அடித்தளம் அமைத்துக்கொடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 143 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கிப்ஸ் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய அணித்தலைவர் கிரேம் சிமித் சதம் விளாசி அணியை 36.5ஆவது ஓவரில் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்தார். ஒருநாள் அரங்கில் அவர் அடிக்கும் 7ஆவது சதம் இதுவாகும். ஆட்ட நாயகனாக அவரே தெரிவுசெய்யப்பட்டார்.

## ஈராக்கில் பாரிய மனித புதைகுழி

பாக்தாத், மார்ச் 10

ஈராக்கில் நூற்றிற்கும் மேற்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டிருந்த பாரிய மனித புதைகுழியொன்றைப் பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

தலைநகர் பாக்தாத்திலிருந்து வடக்கே உள்ள காலிஸ் நகரம் பகுதியிலேயே இப்புதைகுழி காணப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நகரப் பகுதியில் கடந்த சில வருடங்களாக ஷியா, சுனி மதப்பிரிவினர் கடுமையான மோதலில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

புதைகுழியிலிருந்து எலும்புக்கூடுகளே அதிகமாக மீட்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

### உலக அரங்கில்

## முகம்மது நபியின் கேலிச் சித்திரம் ஆப்கானிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

காபூல், மார்ச் 10

கடந்த வருடம் வெளியான இறைதூதர் முகம்மது நபி அவர்களின் கேலிச் சித்திரத்தை மீண்டும் டென்மார்க் நாட்டுப் பத்திரிகைகளில் வெளியிட்டமையைக் கண்டித்து, ஆப்கானின் மேற்கு நகரான ஹெராத்தில் பெரியளவிலான கண்டன ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், டச்சு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், குரானை விமர்சித்து, ஒரு திரைப்படத்தை வெளியிடத் திட்டமிட்டிருப்பதற்கும் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

அந்த நாடுகளின் தேசியக் கொடிகளை எரித்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், ஆப்கானிஸ்தானில் இருக்கும் நேட்டோ நாடுகளின் படையிலிருந்து அந்நாட்டுப் படைகளை விலக்க வேண்டும் என்றும் முழக்கமிட்டார்கள்.

### மலேஷியப் பொதுத் தேர்தல்

# அஹமது படாவியின் தலைமைக்கு பெரும்பான்மை இல்லாத வெற்றி!

கோலாலம்பூர், மார்ச் 10

இந்திய வம்சாவளியினர் தொடர்பான பிரச்சினை, ஊழல்கள், பணவீக்கம் ஆகியவற்றால் மலேஷியப் பொதுத் தேர்தலில் ஆளும் கூட்டணி இம்முறை மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஈட்டத்தவறிவிட்டது.

எனினும், நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் பொதுத்தேர்தலில் ஆளும் பாரிஸான் நஷனல் கூட்டணி அதிப்படியான இடங்களைக் கைப்பற்றி வெற்றிபெற்றுள்ளது. 1957 ஆம் ஆண்டு, பிரிட்டனிடமிருந்து மலேஷியா சுதந்திரம் பெற்றதுமுதல் இந்தத் தேசிய முன்னணியே ஆட்சி செய்து வருகின்றது.

தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் மலேஷிய இந்தியக் காங்கிரஸின் தலைவரும் பொதுப்பணித்துறைகள் அமைச்சருமான டத்தோ சாமிவேலு தனது தொகுதியில் தோல்வியடைந்தார். அதேவேளை, மலேஷிய இந்திய வம்சாவளியினரின் உரிமைகளுக்காகப் போராடிய ஹிண்ட்ராப் அமைப்பின் தலைவர் மனோகரன் தனது தொகுதியான செலங்கோரில் பெரு வெற்றிபெற்றார். அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திய அவர் கைதுசெய்யப்பட்டு தற்போது சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஆதரவாக அவரது மனைவி தேர்தல் பிரசாரம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

222 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஆளுங்கூட்டணி 39 வருடங்களுக்குப் பின்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை ஈட்டத் தவறியுள்ளது. தற்போதைய தேர்தல்களில் 139 ஆசனங்களையே இக்கூட்டணி ஈட்டியுள்ளது. இதனால், பிரதமர் அப்துல்லா அஹ்மது படாவியின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டதென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

2004ஆம் வருடத்திய தேர்தல்களில் 91 சதவீத வெற்றியை இக்கூட்டணி பெற்றிருந்தது. 13 மாநிலங்களில் 12 மாநிலங்களை ஈட்டியிருந்தது. இம்முறை ஐந்து மாநிலங்களை இழந்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அப்துல்லா செல்வாக்கை இழந்து வந்துள்ளார் என்பதை இம்முடிவுகள் வெளிப்படுத்துகின்றன என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

''நாங்கள் சாதாரண வெற்றியையே ஈட்டியுள்ளோம். புதிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக (இன்று) திங்கட்கிழமை மன்னரோடு கலந்தாலோசிக்கவிருக்கிறேன். நான் பதவி துறப்பேன் என எவரும் எண்ணிவிடக்கூடாது.'' - என பிரதமர் படாவி செய்தியாளர்கள் மத்தியில் நேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

சீனர்கள் செறிந்துவாழும் வட யெனாங்கில் தேசியக் கூட்டமைப்பு தோல்வி கண்டுள்ளது. அத்துடன், செயாங்கூர், கெடா, பெர்க் ஆகிய மாநிலங்களையும் முதன்முறையாக இழந்துள்ளது. கெலான்டான் மாநிலம் எதிரணியிடம் சிக்கியுள்ளது. முன்னாள் பிரதமர் மஹாதீர் மொஹமத், படாவி பதவி துறக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். அப்துல்லா படாவியின் மருமகன் கைரி ஜமாலுதீன் நிருபர்களிடம் பேசுகையில், ''நாம் பதவி துறக்க மாட்டோம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக செயல்பாட்டுக் கட்சி, மக்கள் நீதிக் கட்சி, பன்-மலேஷிய இஸ்லாமியக் கட்சி ஆகியவற்றின் எதிரணிக் கூட்டணி 82 ஆசனங்களைப் பெற்றுள்ளது. இம்முறை ஆளுங்கட்சிக்கு சீனர்களினதும், இந்திய வம்சாவளியினரதும் கணிசமான ஆதரவு கிட்டவில்லை.

மலாய் முஸ்லிம்களுக்கு தொழில் வாய்ப்பு, வர்த்தகம், கல்வி ஆகிய துறைகளில் வழங்கப்படும் முன்னுரிமை தங்களுக்கு வழங்கப்படுவதில்லை என சீனர்களும், இந்திய வம்சாவளியினரும் முறையிட்டு வருகிறார்கள். மலேஷியாவில் உள்ள 2 கோடி 70 லட்சம் மக்களில் 60 சதவீதமானோர் மலேயர் ஆவர். சீனர்களின் எண்ணிக்கை 25 சதவீதமாகும். இந்தியர்களின் தொகை 8 சதவீதமாகும்.

(சி)

## சேர்பிய நாடாளுமன்றம் கலைப்பு

பெல்கிரேட், மார்ச் 10

சேர்பிய நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் கலைக்கப்பட்டது. அத்துடன் சேர்பிய பிரதமர் கொஸ்டுனிதா தமது பதவியை இராஜினாமா செய்தார். கொசோவோ பிரிந்ததையடுத்து இவரது கூட்டரசில் பிளவு ஏற்பட்டமையால், இவர் பதவியிலிருந்து விலக நேர்ந்ததுடன் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு காரணமாகவும் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேமாதம் புதிய தேர்தலை நடத்த தாம் சிபாரிசு செய்யப்போகின்றார் என வொஸிஸ்லேவ் கொஸ்னிடுதா அறிவித்துள்ளார். அரசியல் ஸ்திரப்பாடின்மையால், சேர்பியாவின் பொருளாதாரம் ஆட்டம்கண்டுள்ளது. ஜனவரி முதல் டினார் நாணயத்தின் பெறுமதி, 6சதவீத வீழ்ச்சி கண்டுள்ளது என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்கள். கொள்கையில் ஐக்கியப்படாத எந்த ஓர் அரசாலும் சிறப்பாகச் செயற்பட முடியாது. இந்த அரசின் முடிவுக்கு இதுவே காரணமாகும். நாம் மக்களின் ஆணையை மீளப் பெறவுள்ளோம் என கொஸ்டுனிகா பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கொசோவோவை தனிநாடாக அங்கீகரித்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து செயல்படுகிறதா? இல்லையா? என்பது குறித்து சேர்பிய வாக்காளர்கள் முடிவெடுக்க வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளார்கள் என, அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

# புத்தாண்டை முன்னிட்டு வாழ்க்கைச் செலவுப் படி

யாழ்ப்பாணம்,மார்ச் 10

சித்திரைப் புத்தாண்டை முன் னிட்டு யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு ஒரு வருடத்திற்கான வாழ்க்கைச் செலவுப் படி நிலுவை வழங்கப்பட்டு வருவதாகச் சங்கத்தின் பொதுமுகா மையாளர் கே.நவநீதன் தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவுப் படியை பணியாளர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு டன் சேர்த்து வழங்குவதற்கு சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதே சமயம் குடாநாட்டில் உள்ள அநேகமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த வாழ்க்கைச் செலவுப்படியைப் பணியாளர்களுக்கு இது வரை வழங்கவில்லை என்று கூட்டு றவாளர்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின்படி சங்கம் லாபத்தில் செயற்பட்டால் மட்டுமே இந்தப் படியை வழங்க முடியும் எனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

(203-224)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகள் தெரிவிக்கின்றன.

வன்முறையும், மிரட்டல்கள் மற்றும் அச்சுறுத்தல்களும் தேர்தல் முடிவைப் பாதிக்கும் என அவை அச்சம் வெளியிட்டுள்ளன.

அரசு கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டதிலிருந்து அப்பகுதியில் வன்முறையும் குழப்பமும் தொடர்ந்து நீடிக்கின்றன.

அப்பகுதியில் நிலைமை முழுமையாகத் திருப்திகரமானதாகக் காணப்படாவிட்டாலும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்குத் தேர்தல் மிக முக்கியமான நடவடிக்கையென அரசின் தேசியப் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

''மட்டக்களப்பில் தற்போது ஜனநாயகம் காணப்படுகின்றது. இது மிகவும் முக்கியமான நடவடிக்கை, நடமாட்ட சுதந்திரம் தற்போது காணப்படுகின்றது.'' - எனக் குறிப்பிடும் அவர் சில மாதங்களுக்கு முன்னர் அப்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்டதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

எனினும், மனித உரிமை அமைப்புகள் நீதியான தேர்தல் அங்கு சாத்தியமேயில்லை என்கின்றன.

எதிர்த்தரப்பால் தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக சில வேட்பாளர்கள் பிரசாரத்தில் ஈடுபடவில்லை எனவும் அவை தெரிவிக்கின்றன.

ஆயுதக் குழுக்கள் உள்ளூர் அதிகாரிகளை அச்சுறுத்தி அவர்களைத் தேர்தலில் போட்டியிடச் செய்துள்ளன என்றும் தெரிவிக்கும் இந்த அமைப்புகள், இதன் காரணமாக வேட்பாளர்கள் குறித்து சுதந்திரமாகத் தெரிவுசெய்வதற்கான சந்தர்ப்பமில்லை என்றும் கூறுகின்றன.

நேற்று இச்செய்தி எழுதப்போகும் வரை தேர்தல் நடைபெறும் பிரதேசங்களில் மோசமான சம்பவங்கள் ஏதும் இடம் பெற்றதான தகவல் கிடைக்கவில்லை.

(அ-உ)


**SKY COMPUTER SYSTEMS**

| | | |
|---|---|---|
| 1GB DDR Kingston Memory | - | 2,750.00/= |
| IMPORTED Computer Table | - | 5,750.00/= |
| Logetech Keyboard White . | - | 600.00/= |
| Normal Speaker | - | 650.00/= |
| 80GB Sata HDD | - | 6,250.00/= |
| DVD Writer | - | '5,250.00/= |
| Combo Drive | - | 4,250.00/= |
| CD Rom Drive | - | 2,500.00/= |
| Asus Mother Board 775 Socket | - | 7,750.00/= |
| Canon Scanner | - | 8,750.00/= |
| Floppy Disk Mouse | - | 1,000.00/= |
| Optical Mouse | - | 650.00/= |
| 12A Torner | - | 9,250.00/= |
| P IV Power Supply | - | 2,500.00/= |
| 2.1 Woofer with FM | - | 4,500.00/= |
| Internal Modem | - | 1,250.00/= |

{POWER TREE UPS 600VA}

Dual core computer with multimedia and + DVD writer and "15" Monitor three year maintanace

Rs 62,500.00/=

Sky Computer Systems

இல 89, கண்டி வீதி, கண்டுக்குளி,யாழ்ப்பாணம்

T.P No:- 021 222 9109

021 4590325

(கச்சேரிக்கு அருகாமையில்)


## தென்மராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீரங்கி மற்றும் ஷெல்கள் ஏவப்பட்ட சத் தங்கள் குடாநாட் டின் பல பகுதிகளிலும் நேற்றிரவு தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்தன.

இதேவேளை -

நாகர் கோயில்-முகமாலைப் பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் 1 மணி முதல் 3 மணி வரை அரசுப் படை களும் விடுதலைப் புலிகளும் கடும் பீரங்கி,ஷெல் தாக்குதல்களைப் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர்.

ஷெல்கள் பல தென்ம ராட்சியில் படைநிலைப் பிரதேசங்களில் வந்து வீழ்ந்தன என அறிய வந்தது.

தென்மராட்சியின் தென்முனையில், இதனால் பெரும் பதற்றம்நிலவியது.

(அ)

## பிரபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரியநேத்திரன், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், பத்மநாதன், சந்திரநேரு சந்திரகாந்தன், கனகசபை, ராஸின் முஹமட் இமாம் ஆகியோரே அங்கு தமது சக நாடாளுமன்ற உறுப்பினரான சிவநேசனின் பூதவுடலுக்கு நெருக்கமாகப் பிரசன்னமா யிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தலைவர் பிரபாகரனுடன் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா. நடேசன், உள வுப்பிரிவுப் பொறுப்பாளர் பொட்டம்மான், நிதிப் பொறுப்பாளர் பா. தமிழேந்தி ஆகி யோரும் கூட வந்து அஞ்சலி செலுத்தினர்.

(சி)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகத்தில் இலங்கை அரசின் பெயர் கெட் டுப்போயும் விட்டது.''

- இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா.நடேசன்.

படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கே. சிவநேசனின் அஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய சமயமே நடேசன் இவ்வாறு குறிப்பிட்டார்.

''மன்னாரில் மட்டுமல்ல, வவுனியா, மணலாறு - மற்றும் வடக்குக் களமுனைப் போரிலும் இப்படித்தான் நகர முடியாமல் - முன்னேற இயலாமல் - அரசுப் படைகள் முடக்கப்பட்டுள்ளன.'' - என்றார் நடேசன்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் வறுமையாலும் பட்டினியாலும் வாடிய மக்களுக்கு கூட்டுறவு முறைமை மூலம் உதவுவதில் முன்னின்றவர் சிவநேசன்.

மக்கள் இடம்பெயர்ந்தபோது அவரும் சேர்ந்து இடம்பெயர்ந்தார். விமானக் குண்டு வீச்சுகளில் மக்கள் பாதிக்கப்பட்டபோது அவர்களுக்கு உதவுவதில் முன்னின்றவர் சிவநேசன்.

கீழ்மட்டத்தில் உள்ள மக்களை கூட்டுறவுத் திட்டத்தின் மூலம் ஊக்குவித்து வாழ்க்கையில் மேம்படும் நிலைக்குத்தூக்கி விட முடியும் என்று கருதிச் செயற்பட்டார் அவர்.

தமிழர் தேசத்தின் விடுதலை மீது அவர் முழு நம்பிக்கை கொண்டிருந்தார்.

தென்னிலங்கையின் நாடாளுமன்ற முறை மூலம் தமிழருக்கு விடிவு கிட்டாது என்று முழுமையாக நம்பிய சிவநேசன், எனினும் அந்த முறைமையின் பின்னடைவுகளை அந்த முறைமை ஊடாகவே சர்வதேசத்துக்கும் அம்பலப்படுத்தினார்.

### தமிழர்களின் உரிமைக்காக வெளிநாடுகளில் குரல் எழுப்பியவர்

தமிழ் மக்களின் அரசியல் குரல் அடக்கப்பட்ட போது அவர் வெளிநாடுகள் எல்லாம் சென்று தமிழர்களின் உரிமைக்காக முழக்கமிட்டுக் குரல் எழுப்பினார்.

மாமனிதர் சிவநேசனின் இழப்பு எமது விடுதலைப் போராட்டத்திற்கும் , தமிழீழ தேசத்திற்கும் ஏற்பட்ட பேரிழப்பு. இவ்வாறான இழப்புகளின் மத்தியில் எமது விடுதலைப் போராட்டம் முழு வீச்சுடன் நகர்ந்து வந்துள்ளது.

சிவநேசனை எனக்கு 20 வருடங்களுக்கு மேலாகத் தெரியும். இவர் இளம் வயதிலிருந்து புரட்சிகர எண்ணங்களுடனும் எமது விடுதலைக்கு அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வந்தார்.

கூட்டுறவு வாழ்வின் ஊடாக தேசத்திற்கு பெரும் பங்காற்றினார். போராளிகளுடனும், மக்களுடனும் இணைந்து வாழ்ந்து வந்தவர்.

தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணங்களைப் புரிந்துகொண்டு இரவு பகலாக உழைத்தவர். எமது விடுதலையை மிகவிரைவில் பெற்றுவிடுவோம் என்ற நிலையில் ஒரு விடுதலை வீரனாக வாழ்ந்தவர்.

### திட்டமிட்ட படுகொலை

அரசு இவரைத் திட்டமிட்டுப் படுகொலை செய்துள்ளது. இவ்வாறான படுகொலைகளினால் எமது தேசம் கலங்கியபோதும், மஹிந்தவின் படுகொலை நடவடிக்கைகளை எதிர்கொண்டு தேசியத் தலைவரின் தலைமையில் அணிதிரண்டு, தனியரசை நிறுவுவதே தமிழர்களுக்கு உள்ள ஒரே வழி.

- இவ்வாறு நடேசன் கூறினார்.

கிளிநொச்சியில் 'ஏ - 9' சாலையை அண்டியுள்ள கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான், புலிகளின் மூத்த உறுப்பினர் கே.வி.பாலகுமாரன் ஆகியோரும் பங்கு பற்றினர்.

யாழ். மாவட்ட கூட்டுறவு சமாஜத்தின் தலைவர் சொலமன் எஸ்.சிறில்,புலிகளின் மகளிர் மேம்பாடு மற்றும் திட்டமிடல் பொறுப்பாளர் எஸ்.தமிழினி மற்றும் பல கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

இந்நிகழ்வில் தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், பத்மினி சிதம்பரநாதன், ஜெயானந்தமூர்த்தி,கே.கஜேந்திரன், ராஸின் முகமட் இமாம், பி.அரியநேத்திரன்,சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், ஸி.சந்திரநேரு, கே.பத்மநாதன் ஆகியோரும் பங்குபற்றினர்.

(உ)

## கோதுமை மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டால் பாண் போன் ) பேக்கரி உணவுப் பொருள்களின் விலைகளை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் - என்று பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் பராக்கிரமபாகு தஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில், உலக சந்தையில் மசகு எண்ணையின் விலை அதிகளவில் உயர்ந்திருப்ப தால் இங்கு எண்ணெய்யின் விலை அதிகரிக்கலாம் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்திருந்தது.

## கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரி வித்தனர்.

இதேவேளை, ஹொக்கலப் பகுதியில் பஸ் ஒன்றை நேற்று சோதனைக்குட்படுத் தியபோது சந்தேகத்தின் பேரில் எட்டுப் பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட னர் என்றும் தெரிவிக்கப் பட்டது. இவர்கள் தமது ஆள டையாளத்தை உறுதிசெய்யத் தவறியவர்கள் என்றும், இவர்களும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(சி)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தில் கொள்ளும்போது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கவுன்ஸில் உடனடியாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவை இலங்கையில் ஏற்படுத்த வேண்டும் என்பது தெளிவாகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நிலையான சமாதான உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்னர் இதனை விரைந்து ஏற்படுத்த வேண்டும்.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு, மனித உரிமை மீறல் விவகாரங்களைக் கண்காணிப்பது, விசாரணை செய்வது மற்றும் இது விடயத்தில் உள்நாட்டுக் கட்டமைப்புகளின் திறனை வளர்ப்பது போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

### நாடு முழுவதும் நிலை கொள்ள வேண்டும்

குறிப்பிட்ட சர்வதேசக் கண்காணிப்புக் குழு சகல தரப்புகளினதும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து ஆராயவேண்டும். மேலும் நாடு முழுவதும் அது நிலைகொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லக்கூடியதாகவும், அரசு உட்பட மோதலில் சம்பந்தப்பட்டுள்ள சகல தரப்புகளையும் சந்திக்கக்கூடியதாகவும் அது இருக்கவேண்டும்.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு எவரையும் சுதந்திரமாகத் தனிப்பட்ட ரீதியில் விசாரிப்பதற்கும், உள்ளூர் மனித உரிமை அமைப்புகள், மோதலில் ஈடுபட்டுள்ளவர்கள், பொது மக்கள் மற்றும் அரச அதிகாரிகள் உட்பட சகல தரப்புகளிடமிருந்தும் தகவல்களைப் பெறுவதற்கும் அனுமதியும் அங்கீகாரமும் அளிக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப் படவேண்டும்.

சர்வதேச கண்காணிப்புக்குழு அறிக்கை வெளியிடுவதற்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்குமான உரிமையைக் கொண்டிருக்க வேண்டும்.

இலங்கையின் மனித உரிமைகள் கடப்பாட்டிற்கு அமைய பொறுப்புவாய்ந்த நடவடிக்கைகளை எடுப்பதையும் விசாரணை மற்றும் தண்டனை வழங்குவதையும் உறுதிசெய்வதான வாக்குறுதி குறிப்பிட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருக்க வேண்டும்.

மோதலில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்புகளுக்கும் இடையே சமாதான உடன்படிக்கை இல்லாத போதிலும், சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்புக்குழுவை ஏற்படுத்துவது சாத்தியமென்பதை உலக நாடுகளின் கடந்தகால அனுபவங்கள் உணர்த்தியுள்ளன.

கௌதமாலா, எல்சல்வடோர் போன்ற நாடுகளில் சமாதான முயற்சிக்கு முன்னரான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு இத்தகைய கட்டமைப்புகள் உதவியுள்ளன.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சபை இலங்கையில் மனிதாபிமானப் பணியாளர்கள் உட்படப் பொது மக்கள் மீது அனைத்துத் தரப்பாலும் மேற்கொள்ளப்படும் தாக்குதலையும் கண்டிக்க வேண்டும்.

மேலும் மனித உரிமை மீறல்கள், அளவுக்கதிகமான - கண்மூடித்தனமான - படைப்பலப் பிரயோகம் ஆகியன குறித்தும், அரச படைகள், விடுதலைப் புலிகள் போன்ற தரப்புகளால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் குறித்தும் விசாரிக்குமாறு இலங்கை அரசை ஐ.நா.கோரவேண்டும்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் பக்கச்சார்பின்மையை நிலை நாட்டுவதன் வாயிலாக, அதற்கான சட்டரீதியான அதிகாரத்தை முழுமையாகப் பயன் படுத்தவும் அதன் மூலம் மனிதாபிமானப் பணியாளர்கள் குறித்த விசாரணைகள் முழுமையாகப் பூர்த்தியாவதை உறுதி செய்யவும் கோர வேண்டும் - என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(அ-உ)


**THE SCIENCE CORNER**

CLOCK TOWER LANE, JAFFNA

**CHEMISTRY**

★ முழு அலகு. உள்ளடங்கலான வினா விடை TUE,THU-2.30-4.00 PM

★ அலகு ரீதியான மீட்டல் SAT,SUN-4.30-11.00 AM

By: DIAS

**மானிப்பாயில்..........**

**100% Practical Education!!**

பல புதிய விடயங்களுடன்

13/03/2008ற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்

**Diploma in Mobile Phone Repairing**

(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)

மேலதிக விபரங்களுக்கு :-

UNI TECHNOLOGY

ICT Education Trainers

Manipay T.P:- 060 - 221 - 6433

( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.